விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 28 புதன்கிழமை (13.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# நிபுணர்கள் குழுவில் இந்தியர் புதுடில்லியை பிரதிபலிக்காது

## இந்தியத் தூதரகம் கருத்து

(கொழும்பு) ஜனாதிபதி நியமிக்கும் நிபுணர் குழுவில் இந்திய மனித உரிமை செயற்பாட்டாளர் இடம் பெறுவது புதுடில்லியின் நிலைப்பாட்டை பிரதிபலிக்காது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.



காணாமற்போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஆறாக அதிகரிக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இக்குழுவில் இந்தியர் ஒரு வரும இடம்பெறுவார் என்று அவர் கூறியிருந்த நிலை 20ஆம் பக்கம் பார்க்க....

## நளினி மீண்டும் உண்ணாவிரதம்!

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினி மீண்டும் நெற்றக் காலை முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

சிறையில் கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் 19ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டில் கடும் வரட்சி 18 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக 16 மாவட்டங்களைச் சேர்ந்த 18 இலட்சத்து 89ஆயிரத்து 430பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டது.

நாட்டின் 157 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் 20ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத் தளபதியுடன் ஜெனிவா பிரதிநிதி பேச்சு



(கொழும்பு)

இலங்கையின் ஜெனீவாவுக்கான வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க நேற்று இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரட்நாயக்கவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இருவரும் உலக நடப்புக்கள்மற்றும்உலக நாடுகளுககும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள்தொடர்பில் இரண்டு பேரும் கலந்துரையாடினர். 19ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்டோவை மோதிய மோட்டார் சைக்கிள்

### மூன்றரை வயதுச் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்றரை வயதுச்சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில யாழ்ப்பாணம் பிறவுண் சந்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கந்தர்மடச்சந்தியிலிருந்து தட்டாதெரு சந்தியை நோக்கி அரசடிவீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவும் யாழ்.நீராவியடிப்பகுதியிலி 20ஆம் பக்கம் பார்க்க....


## நான் நாடகமாடினேன்

# மாணவன் வாக்குமூலம் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

காயங்களை நானே ஏற்படுத்திக் கொண்டேன் என சப்ரகமுவ பல்கலைக் கழக தமிழ் மாணவன் ஒப்புக் கொண்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த போது தம்மை மாணவர்கள் தாக்கியதாக குறித்த மாணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.



முகமூடி அணிந்த இருவர் பல் 20ஆம் பக்கம் பார்க்க....

# அமைச்சர் ராஜிதவின் மீது பொது பல சேனா பாய்ச்சல்

(கொழும்பு)

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்னவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டுப்படுத்தாவிடின் நாங்களே கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று பொது பல சேனா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேநேரத்தில், ராஜித சேனாரட்ன அளவுக்கு மீறி செயற்பட்டால் அவருக்கெதிராக தம்வசமுள்ள மேலும் பல ஆவணங்கள் வெளியிடப்படும் என்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.



கொழும்பு, கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பெதத நிலையத்தில் இடம்பெற்ற பொது பல சேனாவின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரரால் இக்கருத்துகள் வெளியிடப்பட்டன.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த வாரம் செவ்வாயக்கிழமை நடைபெற்ற எமது அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் ராஜித குறித்த 20ஆம் பக்கம் பார்க்க....

## பாப்பரசரின் வருகைக்குமுன் ஜனாதிபதித் தேர்தல் !

### நீதிமன்றில் ஆலோசனை பெறத்திட்டம்

(கொழும்பு)

பாப்பரசரின் இலங்கை விஜயத்திற்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்திவிட வேண்டும் என மகிந்த ராஜபகஷ தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

அவ்வாறு முன்னதாக தேர்தலை நடத்துவதற்கு அதற்கு சட்டத்தில் இடமுள்ளதா என்று அறிந்து கொள்ள உயர்நீதிமன்றக்கை நாட உள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு நவம்பர் 19-ம் திகதிக்கு முன்னதாக, ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியுமா என்று உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிய, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தின்படி தேர்தலுக்கு 35 தொடக்கம் 65 நாட்களுக்குள், அமைப்பு வி 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீவுப்பகுதி குடிநீர்ப்பிரச்சினைக்கு விரைவில் கூட்டமைப்பினால் தீர்வு

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் குறித்து எதிர்வரும் மாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்ட கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

தீவுப்பகுதி விளையாட்டு கழகங்களிற்கு விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1995 ஆம் ஆண்டிலிருந்து தீவுப்பகுதி இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டிலிருந்தது. அக்காலப்பகுதியிலிருந்து இன்று வரை தீவுப்பகுதியில் அரசாங்கம் எவ்வித அபிவிருத்தியினையும் மேற்கொள்ளவில்லை.

குறிப்பாக இங்குள்ள பிரதான வீதிகள் உட்பட எவ்வீதிகளும் செப்பனிடப்படவில்லை.

மாகாணசபை வந்த பிற்பாடு தான் மண்டைதீவு பிரதான வீதி உட்பட தீவகத்திலுள்ள வீதிகள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

தீவுப்பகுதியில் அபிருத்தியுடனான மாற்றத்தை கொண்டு வருவதுதான் எமது தற்கால செயற்பாடுகளாகும்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் அப்பால் 1990களில் மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி இடங்களினைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலணைப்பகுதியில் வெட்டிச் சாய்க்கப்பட்டு மண்டைதீவு தோட்டக் கிணற்றில் புதைக்கப்பட்டனர்.

இவ்வாறான கெடுபிடிகளுக்கு மத்திலும் தீவக மக்கள் தெளிவான சித்தனையை கொண்டு பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் ஆகியவற்றில் தெளிவான முடிவினை வெளிக்காட்டியிருந்தனர்.


எங்களிற்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டு சுயநிர்ணய அடிப்படையிலான சுய ஆட்சி வேண்டும். அபிவிருத்தியினால் மட்டும்



எமக்கான உரிமையினை பெற்றுவிட முடியாது.

தீவகத்தில் வறட்சி வாட்டுகின்றது. இந்நீர்ப்பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் மாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கையெடுக்கவுள்ளது என்றார் அவர். (எ-4)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு தண்டம் விதிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 3 போத்தல் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ. வகாப்தீன் தீர்ப்பளித்தார்.

மேற்படி தண்டம் பணம் கட்டத் தவறும் பட்சத்தில் 3 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் நீதவான் குறிப்பிட்டார்.

கிளிநொச்சிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மேற்படி நபர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து மேற்படி நபர் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (எ-11)

# சாட்சியமளிக்கச் சென்றவர்களை புலனாய்வுத்துறை அச்சுறுத்தியது

## பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னாரில் சாட்சியமளிக்க சென்றவர்களை புலனாய்வுத் துறையினர் அச்சுறுத்தியதால் பலர் சாட்சியமளிக்க செல்லவில்லை என பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை இ.செபமர்லை தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காணாமல் போனோர் குறித்து கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான நான்கு தினங்கள் சாட்சியப் பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

மாந்தை மேற்கு, மன்னார், மடு ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் விசாரணைகளுக்கென சுமார் 230 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் 155 பேர் மட்டுமே ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மடு பிரதேச செயலகத்தில் விசாரணைகள் முடிவ்டைந்த நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ் வெல் பராக்கிரம பரனகமவை மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, மன்னாரிலுள்ள புலனாய்வுத்துறையினர் சாட்சியமளிக்க வந்த பலரிடம் ஆணைக்குழு முன் சாட்சியம் அளிப்பதில் எவ்வித நன்மையும் இல்லை எனக் கூறி சாட்சியம் அளிக்கவிருந்த மக்களை தடை செய்துள்ளனர்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவில் மக்கள் நம்பிக்கை கொண்டார்களோ இல்லையோ, அரசில் கடமையாற்றும் புலனாய்வுத்துறையினர் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது கவலையளிக்கிறது.

அத்துடன் விசாரணைக்கு சமுகமளிக்கவிருந்த மக்களை பொலிஸார் அச்சுறுத்தியும் இருந்தனர் என்று எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவித்தார்.

இதற்கு ஆணைக்குழு தலைவர் பதிலளிக்கையில்,

இந்த ஆணைக்குழு காணாமல்போனோர சம்பந்தமாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவாகும்.

இதன் மூலம் மக்களுக்கு விமோசனம் ஒன்றை பெற்றுக கொடுப்பதே எமது நோக்கமாகும். மக்களுக்கு தடைகளை யாராவது ஏற்படுத்தினால் எங்களுக்கு தகவல் தாருங்கள். நாம் அது குறித்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்று ஜனாதிபதி ஆணைக குழுவின் தலைவர் மெக்ஸ் வெல் பராக்கிரம பரனகம தெரிவித்தார். (எ-11)


## விற்பனைக்கு

LF XXXX மிட்சுபிசி படி 650 CC (பெற்றோல்) விற்பனைக்கு உண்டு.
(இலகு கொடுப்பனவும் ஒழுங்கு செய்து தரப்படும்)
தொடர்பு: 077 623 7956
(7292)


# அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம்:-14**
**ஆதன இலக்கம்:-10/38**
**மடத்தடி ஒழுங்கை**

வட்டாரம் 14 மடத்தடி ஒழுங்கை ஆதன இலக்கம் 10/38 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை) "கோட்டாத்துறை" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 15.43 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த அமரசிங்கம் கமலானந்தன் அவர்களால் நன்கொடை உறுதிமூலம் சண்டிலிப்பாய் சேக்கிழார் மன்ற அறநெறிப் பாடசாலைக்கு நன்கொடை குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி கிருஸ்ணவேணி சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1492 ஆம் இலக்க 18.04.2014 ஆம் திகதிய நன்கொடை உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கோட்டாத்துறை" நிலப்பரப்பு குளி 15.43 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சண்டிலிப்பாய் சேக்கிழார் மன்ற அறநெறிப் பாடசாலை என்ற பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

*(7286)*


## விற்பனைக்கு

பின்வரும் இலக்கங்களையுடைய
மோட்டார் வாகனங்கள்
விற்பனைக்கு உண்டு.
TVS SCOOTY PEP - NP VG-XXXX
BAJAJ CT100- NP ME - XXXX
தொடர்புகட்கு : 0776549303



## ஐசிங் கேக் வடிவமைத்தல்

**2 நாள் செயன்முறைப் பயிற்சி**

பிறந்த நாள் அல்லது திருமண வைபவத்திற்கான
ஐசிங் கேக் வடிவமைத்தல்
முறைகளை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

16.08.2014 சனி காலை 9.30-மாலை 2.30
பிறந்த நாள் ஐசிங் கேக் வடிவமைத்தலும் நுட்பமும்

17.08.2014 ஞாயிறு காலை 9.30-மாலை 2.30
திருமண கேக் வடிவமைத்தலும் நுட்பமும்

* ஒருவர், விரும்பிய ஒரு நாள் மட்டும் அல்லது இரண்டு நாட்களும் கலந்து கொள்ளலாம்.
* பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் இன்றிலிருந்து முன் பதிவுகளை தூரிகை நிறுவனத்தில் மேற் கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு
இயக்குநர்: S.Ragu- 077 914 3171 அல்லது 021 490 1358
இலக்க தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**தூரிகை**
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி


# கஞ்சா நுகர்ந்த மூவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வீதியில் வைத்து கஞ்சா நுகர்ந்துகொண்டிருந்த 3 பேருக்குத் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று தீர்ப்பளித்தார்.

மேற்படி மூவரும் கஞ்சா நுகர்ந்துகொண்டிருக்கும் போது, கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அதன்போது, அவர்களிடமிருந்து தலா 3 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டன.

தொடர்ந்து, மேற்படி நபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான இந்த உத்தரவை பிறப்பித்தார். (எ-11)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

## புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2012/2013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் அனைத்து வருட மாணவர்களுக்குமான கல்வியாண்டு **2012/2013** இற்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் **25.08.2014** ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி **11.08.2014** ஆம் திகதி விரிவுரைகள் நடைபெறமாட்டாது என்பதனை மாணவர்கள் கவனத்திற்கொள்ளவும்.

**வழிகாட்டல் நிகழ்வு**

இராமநாதன் நுண்கலைக்கழகத்துக்கு கல்வியாண்டு **2012/2013** இற்குத் தெரிவு செய்யப்பட்டுப் பதிவுகளை மேற்கொண்ட சித்திரமும் வடிவமைப்பும், நடனம், இசை ஆகிய பாடநெறிகளுக்கான புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வுகள் (Orientation Programme) எதிர்வரும் **25.08.2014** ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நடைபெறும்.

**பதிவாளர்**
**யாழ் பல்கலைக்கழகம்.**
**08.08.2014**

*(சி-8181)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோரின் குடும்பத்தேவைகளை செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பீடு செய்யவுள்ளது

(கொழும்பு)

யுத்த காலத்தில் காணாமற் போனோரின் குடும்பங்களின் தேவை மதிப்பீடொன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) எதிர்வரும் செப்டெம்பரில் ஆரம்பிக்கவுள்ளது.

வளத் திட்ட வரைபுகள் மூலமாக முன்னேற்றம் தேவைப்படும் இடங்களை அடையாளம் காண்பதனூடாக அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவிகளை வழங்கி, இலங்கை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படுவதற்குப் பரிந்துரைகளை உருவாக்குவதே குடும்ப தேவைகள் மதிப்பீட்டின் பிரதான நோக்கமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முரண்பாட்டின் போது பாதிக்கப்பட்ட இந்தக் குறிப்பிட்டோருக்கான அரசாங்கத்தின் கொள்கைகளை அது சீராக்குவதற்கு இந்த குடும்ப தேவைகள் மதிப்பீடு நிகழ்ச்சிட்டம் உதவி வழங்கும் என கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு இணைப்பாளர் வெனல்லே பொன்ரனா தெரிவித்தார் என்று கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாகத்திற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் அறிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான பட்டியலின் பிரதிநிதித்துவ மாதிரியை ஆரம்பத்தில் கொண்டிருக்கவுள்ள இந்தக் கணக்கெடுப்பு, பூர்த்தியடைவதற்கு ஒரு வருடம்வரை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் அறிக்கையொன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்கத்திடம் வழங்கவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் 9.48,9.50ஆம் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, காணாமற் போனதாகக் குறிப்பிடப்படும் விடயம் தொடர்பாக இணைந்து செயற்பட்டு வருகிறது.

ஏனைய நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறை முறைமைகளைப் படித்தலை இது உள்ளடக்குகிறது. காணாமற் போனதாகக் குறிப்பிடப்படும் நபர்களின் குடும்பங்களுக்குக் காணப்படும் பிரச்சினைகள் குடும்ப தேவைகள் மதிப்பீட்டின் கண்டுபிடிப்புகளை அமுல்படுத்தும் பொறிமுறையொன்றினூடாகத் தீர்த்துவைக்கப்படும்.

மேலதிகமாக, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரை 9.51 ஆனது, காணாமற் போனோர் சம்பந்தமான அனைத்துத் தகவல்களையும் ஒன்றிணைத்து, தேசிய மட்டத்தில் தரவுச் சேகரிப்பு மைய கட்டகமொன்றின் அமுலாக்கத்திற்கு அறிவுரை வழங்குகிறது. காணாமற் போனாரின் குடும்பங்களின் தேவைகள் தொடர்பாக விபரமான பார்வையொன்றை வழங்குவதனூடாக இந்தப் பரிந்துரையை நிறைவுசெய்வதற்கு குடும்ப தேவைகள் மதிப்பீடு உதவும்.

காணாமற் போனோரின் குடும்பங்களை சமூகத்தில் சிறப்பாக ஒருங்கிணைப்பதற்கு உதவும் முகமாக அதிகாரிகள் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் முழுமைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாக குடும்ப தேவைகள் மதிப்பீடு அமையும். வெவ்வேறான தேவைகள் நிறைவுசெய்யப்படக்கூடியதாக சமூகங்களுக்கும், அரசாங்கத்திற்குமிடையே ஐக்கிய வலையமைப்பொன்றைக் கட்டியெழுப்பும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப தேவைகள் மதிப்பீட்டிற்கான முன்மொழிவு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவை அமைப்பு ஆகியவற்றினால் இவ்வருட ஆரம்பத்தில் சமர்ப்பிக் கப்பட்டதோடு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்தலைக் கண்காணிப்பதற்குப் பொறுப் பாகவுள்ள ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த முன்மொழிவை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டமை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மிகவும் மகிழ்வடைகிறது.

எங்களது சிறந்தளவைச் செய்வதற்கு நாங்கள் எதிர்பார்ப்புடன் காணப்படுகிறோம் என பொன்ரனா தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)


UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH



August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்

Cambridge - Prelimnary English Test (PET)

- இது ஒர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

EXAM DATE 14-11-2014 - COLOMBO

Cambridge First Certificate in English

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்கும் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.



Course Schedule

Mon,Tuse,Wed,Thur Saturday&Sunday

Duration 10Week

Time 10.00 - 12.00 03.00 - 05.00

03.00 - 05.00

Exam date 05-12-2014-Colombo

புதிய பிரிவுகள் 18 - 08 - 2014 இல் ஆரம்பமாகும்.

BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 , 077 880 3887

(சி-8180)


## இன்றைய இராசி பலன்

13.08.2014

(ஆடி 28, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

திருதியை மாலை 5.51 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 7.46 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சுபநேரம் 4.35-6.05 மணிவரை

வளவன்

**மேடம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** எதிர்கால முன்னேற்றம் கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக்கண்டு கொள்வீர்கள், பிறர் உதவிகளுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** காலையில் கலகலப்பாகவும், மாலையில் சலசலப்பாகவும் அமையலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வார்த்தையில் நிதானம் தேவை.

**கன்னி** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**துலாம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த [illegible]

**தனுசு** திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்திதரும், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்** சயனசுகமுண்டு, நண்பர்கள் உதவிசெய்ய முன்வரலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும், கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு


(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 69 இந்திய மீனவர்களது விளக்கமறியல் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களால் நீடிக்கப்பட்டுள்ளன.

ஜுலை மாதம் 29 ஆம் திகதி நெடுந்தீவிற்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து 7 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 51 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியல் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் பொன்னம்பலம் குமாரசாமி நேற்று உத்தரவிட்டார்.

அதேவேளை, ஜுலை 22 ஆம் திகதி எழுவைதீவுக் கடற்பரப்பில் வைத்து 5 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி மீனவர்களை, யாழ்.கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையினர் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



நன்றி-மிரர்

# பல்கலை.மாணவன் மீதான தாக்குதலுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சப்ரகமுக பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரத் தாக்குதலை வன்மையாக கண்டித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றவாளிகளை காப்பாற்றும் விதத்தில் உயர் கல்வி அமைச்சரின் கருத்து இடம்பெற்றுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிளிநொச்சி முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன்(வயது 24) என்ற மாணவன் மீது கடந்த 3.8.2014 அன்று அதிகாலை 2.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவதினம் பல்கலைக்கழக விடுதியிலுள்ள கழிப்பறைக்கு சுதர்சன் சென்றபோது அங்கு காத்திருந்த ஐந்து நபர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டதுடன், கழுத்தில் கயிறுபோட்டுத் திருகப்பட்டுமுள்ளார்.

பல்கலைக்கழக விடுதிக்குள் வைத்து தாக்குதலை நடத்தியவர்கள் கொச்சைத் தமிழிலும், சரளமான சிங்களத்திலும் பேசியவாறு தாக்குதல் நடத்திவிட்டு யாருடைய கண்ணிலும் படாமல் தப்பியும் சென்றுள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவ மாணவிகள் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் அவ்வாறில்லாவிடில் மாணவர்கள் கொல்லப்படுவதுடன், மாணவிகள் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் கொச்சைத் தமிழில் எழுதப்பட்ட எச்சரிக்கை துண்டுப் பிரசுரங்கள் குறித்த பல்கலைக்கழக விடுதிச் சூழலில் ஒட்டப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிங்கள பௌத்த தேசியவாத மானது இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு, அதில் சகல அதிகாரங்களும் சிங்கள பௌத்தர்களுக்கே உரியதென்ற கருத்து நிலையை கொண்டுள்ளது.

அந்த அதிகாரத்திற்கு சவால் விடக்கூடிய ஆற்றலுள்ளவர்களாக வேறு எந்த இனத்தவரோ மதத்தவரோ வளர்ந்து விடக்கூடாது என்ற சிந்தனை அதனிடம் மேலோங்கி வருகின்றது. அத்தகைய சிந்தனைப் போக்கின் வெளிப்பாடாகவே மேற்படி சம்பவங்கள் அமைகின்றன.

உண்மை நிலை இவ்வாறிருக்க தாக்கப்பட்ட மாணவன் தன்னைத் தானே தாக்கினார் என்று உயர்கல்வி அமைச்சர் கூறியிருப்பதானது கண்டனத்திற்குரியது, இச்சம்பவத்தின் உண்மையான பின்னணியையும் திசைதிருப்புவதாகவும் அமைந்துள்ளது.

உயர்கல்வி அமைச்சரின் இத்தகையை செயற்பாடானது சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை பாதுகாத்துள்ளதுடன், எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு அரசின் முழுமையான ஒத்துழைப்பும் பாதுகாப்பும் இருக்கும் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியுள்ளது.


சிங்கள பௌத்த தேசியவாதத்தின் இத்தகைய மனோநிலையோடு தமிழ்த் தேசமானது நல்லிணக்கத்திற்கு வரவேண்டுமென வலியுறுத்தும் சர்வதேச சமூகத்திற்கு இத்தகைய சம்பவங்கள் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்தக் கொடூர தாக்குதல் சம்பவத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பக்கபலமாக நாம் எப்போதும் நிற்போம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அந்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)




# மண்டைதீவு வீதி புனரமைப்பை த.தே.கூ.உறுப்பினர்கள் பார்வை

வடக்கு மாகாணசபை நிதியில் புனரமைக்கப்பட்டு வரும் மண்டைதீவு பிரதான வீதியினை நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.



420 மில்லியன் ரூபா செலவில் மண்டைதீவு பிரதான வீதி, சுருவில்-வேலணை வீதி, காரைநகரில் உள்ள வீதி ஆகிய மூன்று வீதிகள் வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் வருடக்கணக்காக திருத்தியமைக்கப்படாதிருந்து தற்போது வடக்கு மாகாணசபையினால் புனரமைக்கப்பட்டுவரும் மண்டைதீவு பிரதான வீதியினையே த.தே. கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ஹென்றி மகேந்திரம் ஆகியோரும் பார்வையிட்டனர்.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் வீதி புனரமைப்பு வேலைகளினை துரிதப்படுத்துமாறும் உறுப்பினர்களினால் வீதி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.(6-4)

# 28637 மெற்றிக்தொன் மீன்கள் பிடிக்கப்பட்டன

**யாழ்.மாவட்ட செயலகத் தகவல்**

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு 28 ஆயிரத்து 637 மெற்றிக் தொன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள 21 ஆயிரத்து 268 மீனவர்களினாலேயே மேற்படி எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 49 திட்டங்களின் கீழ் 407 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளன.

இதன்மூலம் மீனவர்களின் மீன்பிடித்தல் முறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படும் மீன்கள், உள்ளூர் நுகர்வினைத் தவிர்ந்த ஏனையவை வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுபவற்றில் நண்டு, இறால், கணவாய் என்பன முக்கிய இடங்களை வகிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் 20 ஆயிரத்து 349 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 87 ஆயிரத்து 284 பேர் இருப்பதாக அந்த புள்ளிவிபரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# சரஸ்வதி தேவி ஊர்வலமும் சிறப்பு பூஜை வழிபாடும்

யாழ்.சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி மாணவர்களினால் சரஸ்வதி தேவி ஊர்வலம் நடைபெற்று சுப்ரா கல்வி நிறுவனத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் சங்கானை சண்டிலிப்பாய் கோட்டங்களுக்குட்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை மாணவர்களுக்கான ஹோம வழிபாடும் குருமார்களின் ஆசிர்வாத நிகழ் வும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இச்சிறப்பு சரஸ்வதி பூஜை சிவன் தேவஸ்தான குரு சிவஸ்ரீ. சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. வழிபாட்டில் சமய சமூகத்தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக் கின்றார்கள். பரீட்சை எழுதும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சரஸ்வதி தேவியின் அருள் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அத்துடன் வலி.மேற்குப் பிரதேசத்தில் வாழும் ஏனைய கோட்டங்களுக்குட்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டு அருள் பெறுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (6)

# கரைசேர்ந்த மீனவர்களை மறியலில் வைக்க உத்தரவு

கடந்த ஜுலை மாதம் 17ஆம் திகதி யாழ். நயினாதீவுக் கடற்கரையை வந்தடைந்த ஐந்து பேரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி ஐந்து பேரும் படகுகள் எதுவுமின்றி நீந்திக் கரை சேர்ந்த போது, கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், தாங்கள் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன்பிடிக்க வந்ததாகவும் தங்களது படகு கடலில் மூழ்கியதாகவும் தெரிவித்திருந்தனர்.

தொடர்ந்து, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி நபர்களின் வழக்கு மீண்டும் இன்று நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவிற்கு 157 முறைப்பாடுகள்

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு மன்னாரில் கடந்த நான்கு நாட்களாக நடத்திய அமர்வுகளின் போது 150 எழுத்து மூல புதிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆணைக்குழுவின் செயலாளர் எச்டபிள்யூ குணதாஸ இது தொடர்பில் தகவல் தருகையில், தமது ஆணைக்குழுவுக்கு நான்கு நாட்களிலும் 157 புதிய முறைப்பாடுகள் கிடைத்ததாக குறிப்பிட்டார்.

ஆணைக்குழு சாட்சியமளிப்புக்காக 225 பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தது.

இதனடிப்படையில் 153 பேர் தமது சாட்சியங்களை வழங்கினர்.

இதனை தவிர 157 புதிய எழுத்துமூல முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன.

இந்தநிலையில் குறித்த 157 முறைப்பாடுகள் தொடர்பான நேரடி சாட்சியங்களுக்காக திகதி குறிக்கப்படும் என்று குணதாஸ மேலும் தெரிவித்தார். (6)

# கேள்வி அறிவித்தல்

**அனர்த்தத்திற்கு தாக்குப் பிடிக்கக்கூடிய நகர அபிவிருத்தி உபாய திட்டம்**
**ஐ.நா. வாழ்விடம் (UN-Habitat)**
**கரைதுறைப்பற்று,பிரதேச சபை, முல்லைத்தீவு.**

**திட்டபெயர்: வடிகால் நிர்மாணம், கள்ளப்பாடு தெற்கு**
**திட்ட இல: NP/14/44(01)/03/VII/09/UNH/2013/I**

01.அனர்த்தத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய நகர அபிவிருத்தி உபாயதிட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் அனர்த்த இடர்குறைப்புச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக UN-Habitat நிறுவனத்தின் ஊடாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியின் ஒரு பகுதி கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள **வடிகால் நிர்மாணம்,கள்ளப்பாடு தெற்கு** எனும் வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02.தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03.கேள்வி கோரல் நடைமுறைக்குஅமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04.கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று** பிரதேசசபை, **முல்லைத்தீவு (தொலைபேசி:-024-3243542, தொலைநகல்: 021 229 0001, e-mail:pskpattu@gmail.Com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 27.08.2014 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 13.08.2014ஆம் திகதியிலிருந்து 27.08.2014 வரை காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 27.08.2014 ஆம் திகதிமாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09.கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தேழு 20.11.2014) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழேஅட்டவணையிற் காட்டப்பட்ட வாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப் பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(01)/03/VII/09/UNH/2013/I | வடிகால் நிர் மாணம், கள்ளப்பாடு தெற்கு | 7.78 | 1மாதம் | C7 அல்லது அதற்கு மேற்பட்டது | 78,000.00 | 22.12.2014 |

11. கேள்வி கோரல் பற்றியமுன்கூட்டிய கூட்டம் 22.08.2014 ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை,**
**முல்லைத்தீவு.**
**வடமாகாணம்**

(சி-7189)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23
12
1956



ஆண்டவன் அடியில்
25
07
2013

## அமரர் நடராஜா தேவராஜா (சின்ராசா)

சேராத செல்வமெல்லாம் சேர்த்து விட்டு
சேர்ந்திருக்க மறந்து நீங்கள் சென்றதெங்கே?
பாரினிலே பந்தங்கள் பல இருக்க எம் செல்வமே
நீங்கள் மட்டும் தனியாக சென்றதேனோ?
ஓராண்டு எமைப் பிரிந்து சென்றதனை
ஒரு பொழுதும் எமது மனம் ஏற்றதில்லை
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
நீங்கள் எம்முடன் வாழ்வதாகவே நிந்தனை செய்கின்றோம்.
ஆண்டுகள் எத்தனை இனிவரினும்
மீண்டும் மீண்டும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்.

இல. 15, கற்குள ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
ந.கமலேந்திரன் குடும்பத்தினர்.

(7282)

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 12 உயரம்: 5’6"
தகைமை/தொழில: PHYSICAL EDUCATION / தனியார் தொழில் (பிரான்ஸ் PR)
தொ.இ: B/1671

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 6 ½ உயரம்: 5’4"
தகைமை/தொழில்: பட்டதாரி / வியாபாரம்
தொ.இ: B/1672

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 26 ¾ செவ் 12 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (கனடா PR)
தொ.இ: B/1674

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 33 ¾
உயரம்: 163 cm
தகைமை/தொழில்: A/L / சொந்த வேலை (கணனி)
எதிர்பார்ப்பு: RC மதத்தவரும் பார்க்கலாம்
தொ.இ: B/1675

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 21 செவ் 1 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: MBBS, MD / வைத்தியர்
தொ.இ: G/2493

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 32 சூரி செவ் 11 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: A/L, CBF, DBF / வங்கியாளர்
தொ.இ: G/2495

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 22 செவ் 2 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்: நுண்கலைமாணி/ ஆசிரியர்
தொ.இ: G/2497

பிறப்பு: 1981 கிறீஸ்தவம் (NRC)
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/2500

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிடம் பல நாடுகள் கற்றுக்கொள்கின்றனவாம்

## இராணுவ பேச்சாளர் பெருமிதம்

இலங்கையின் யுத்த தந்திரோபாயங்களை பல நாடுகள் கற்றுக்கொள்வதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகள் இலங்கையின் யுத்த தந்திரோபாயங்கள் மற்றும் இரகசியங்களை பாடமா கக் கற்றுக்கொள்வதாகத் தெரி வித்துள்ளார். இருபது நாடுகளின் இராணுவ அதிகாரிகள் தற்போது இலங்கையின் பல முகாம்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் யுத்த தந்திரோபாயங்கள் பற்றி கற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

கொடூரமான பயங்கரவாதிகளை மிகச் சிறந்த முறையில் வெற்றி கொண்ட இரகசியங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றி அறிந்து கொள்ள பல நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கைப் படையினருக்கே உரிய வகையில் பல்வேறு புதிய யுத்த தந்திரோபாயங்கள், யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். சர்வதேச யுத்த சட்டங்களுக்கு அமைவான வகையில் படையினர் யுத்தத்தை முன்னெடுத்து வெற்றியீட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய யுத்த தந்திரோபாயங்களை பயன்படுத்தி வந்த இலங்கை படையினர் பயங்கரவாத இல்லாதொழிப்பிற்காக பல்வேறு புதிய யுத்த தந்திரோபாயங்களை அறிமுகம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பின் போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களை படையினர் வெளிநாட்டு அதிகாரிகளுடன் பகிர்ந்துகொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (6)

# தந்தையும் மகனும் கொடூரக் கொலை

(கொழும்பு)

மீஹாதென்ன பகுதியில் தந்தை ஒருவரும் அவரது மகனும் இனந்தெரியாதோரினால் இரும்புக் கம்பியால் மிகவும் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 74 மற்றும் 42 வயதுடைய இவர்கள் இருவரும் மீஹாதென்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டுள்ள பொலிஸார், தாக்குதல்தாரிகளை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர். (6)



யாழ்.மாவட்டத்தில் சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்ற மண்டபத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பங்கேற்புடன் இடம் பெற்றது.

(படங்கள்: என்.குமார்)



# குழுமோதலில் இருவர் கைது

யாழ். ஊரிக்காடு, நெற்குழு பகுதியில் உள்ள வைரவர் கோவில் ஒன்றில் இடம்பெற்ற கோஷ்டி மோதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 19 மற்றும் 21 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரை திங்கட்கிழமை இரவு கைது செய்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கோவிலில் நேற்றுமுன்தினம் இரவு பூங்காவனத் திருவிழா இடம்பெற்றது. இதன் போது, இரு குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில், அங்கு சென்ற தாம் மோதலை கட்டுப்பாட்டினுள் கொணடு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, விசாரணை மேற்கொண்டு ஊரிக்காடு பகுதியைச் சேர்ந்த இந்தச் சந்தேக நபர்களை கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (6)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 200 |
| தக்காளி | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 60 | 90 |
| கரட் | 80 | 120 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 40 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 |
| பீற்றூட் | 50 | 70 |
| கறிமிளகாய் | 130 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 50 |
| போஞ்சி | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25-30 |
| இராசவள்ளி | 80 | 80 |


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 104

Search for people, places and things — Nagendram Home

லெசிலி அபி





ராகுலன் பாலா





தர்ஷ் தர்ஷசன்




டொறின் மன்மதநாயகம்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




கிறிஸ்ரிஅனோ சவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தெரிவுக்குழு நோக்கியே செல்லும்!

...இப்போதும் அவர்களைக் கேட்டால் தாம் தவறவிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று என ஒப்புக்கொள்வதைக் காணலாம். இதற்கு முன்னருங் கூட கூடுதல் வாய்ப்புக்களை அவர்கள் தவறவிட்டிருக்கக்கூடும்.

ஒரு தடவை தமிழருக்கான அரசியல் தீர்வுப் பொதியொன்றைப் பாராளுமன்ற அவையில் வைத்து சந்திரிகா சமர்ப்பித்த போது அதனைப் பெற்றுக்கொண்ட ஐ.தே.க எதிர்க் கட்சியினர் அவ்விடத்திலேயே அப் பிரேரணைகளை தீயிட்டுக் கொளுத்தியிருந்தனர். எரித்த இந்நிகழ்வு பற்றிய பத்திரிகைச் செய்தியொன்று மட்டும் வெளிவந்திருந்தது.

இந்நிகழ்வின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதியென்ற பெயரில் தனது அரசியல்/தேர்தல் ரீதியிலான செயற்றிட்டத்தினை மூடிமறைப்பதற்கு பதவி ஆளுமையை பயன்படுத்தும் முயற்சியே அது என சந்திரிகாவைக் குற்றஞ்சாட்டிய ஐ.தே.க.தீர்வுப் பொதியையும் எதிர்ப்பதாகக் கூறியது. இருவிதமான சீர்திருத்தங்களை ஒரே தீர்வுப் பொதியினுள் சந்திரிகா சேர்த்துக் கொள்ளவேண்டியிருந்த காரணம் என்ன? என்று எவருமே கேள்வியெழுப்பியதுமில்லை. என்ன காரணத்திற்காக தீர்வுப் பொதியின் உள்ளடக்கத்தை ஐ.தே.க வால் வெளிப்படுத்த முடியாதிருந்தது? என்ற கேள்வியுங்கூட அங்கு எழவில்லை.


காரணம் எதுவாயிருப்பினும் இரு தரப்புமே தீர்வுப்பொதியை அனுமதிக்க தயாரில்லை என்பது மட்டும் வெளிப்படையானது. தமிழீழ விடுதலைப்புலிகளைப் பின்னணியில் கொண்ட தமிழ் மிதவாதிகளுங்கூட பெரிய தேசிய கட்சிகளிரண்டினதும் இத்தகைய நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை. தீர்வுப் பொதியை வெளிப்படுத்தி இனத்துவ சீர்திருத்தம் மட்டில் தனியான வாக்கெடுப்பினை மேற்கொள்வதுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மட்டில் சீர்திருத்தமேதான் வேண்டியதென்றால் அதற்கும் சேர்த்து வெவ்வேறாக வாக்கெடுப்பு மேற்கொள்ளலாம் என தமிழ் மிதவாதிகள் தரப்பிலிருந்து எவருமே பிரேரித்ததுமில்லை.

## வகைதொகையற்ற முரண்பாடுகள்

கட்சியினது ஜனாதிபதி தேர்தல் மூலோபாயம் மற்றும் வேட்பாளர் பற்றிய பல்வேறு உள்முரண்பாட்டுக் கருத்தொலிகள் மத்தியிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது அல்லது அதில் சீர்திருத்தம் மேற்கொள்வது என்ற தீர்மானத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒன்றுபட்டிருந்த போதிலும் இனப்பிரச்சினை விடயத்தில் அனைவரும் மௌனமாகவேயிருந்தனர்.


அதுமட்டில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குமே இருப்பதாகவும் அந்தத் தீர்மானத்தை தாம் ஆதரிப்பது என்பது போன்ற ஒரு நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இருப்பதாகத் தோன்றியது. குறைந்தது இந்தத் தடவையாவது ஐக்கிய தேசியக் கட்சியின் வார்த்தைகள் வெறும் பேச்சு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியாது போனதால் அவர்களது பேச்சிற்கு அது விலை போயிற்று.


தமக்கே உரித்தான கொள்கைகளுடன் தமது தனித்துவ பாணியில் செயற்படக் காத்திருக்கும் அரசு போல் தனது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்தது. நாட்டினது உயர்பதவிக்கான போட்டியாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விட வேறு ஒருவருக்காக பிரசாரம் செய்யத் தயாராகும் ஒரு கட்சியென்ற ரீதியில் அடுத்து வருகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான தனது நிலைப்பாட்டினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெளிவுடுத்த வேண்டியதாயிருந்தது.




2010 இல் இடம்பெற்ற போருக்குப் பிந்திய ஜனாதிபதித் தேர்தலில் தான் எடுத்திருந்த நிலைப்பாட்டினை மட்டும் நினைவிற் கொள்ள வேண்டிய தேவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கும். பகுத்தறிவிற்கொவ்வாத விதத்தில் அனைத்து நியாயவாதங்களையும் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துச் செயற்பட்டிருந்தது. அதன்போது ஜனாதிபதி ராஜபக்ஷவை எதிர்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போரின் இறுதி முடிவைத் தீர்மானிப்பதும் மிகுந்த சர்ச்சைக்குரியதாகவுமிருந்த 4ஆம் ஈழப்போரினூடாக இலங்கை இராணுவத்திற்கு தலைமை தாங்கி நடத்திய சரத் பொன்சேகாவை ஆதரித்திருந்தது.











அரசாங்கத்துடனான போருக்குப் பிந்திய பேச்சுவார்த்தை முடக்க நிலையுடன் மேற்கு நாடுகளின் நம்பகத்தன்மை என்ற பின்னணிப் பாட்டிற்கு இசைவாகத் தனது சுருதியை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மீட்டத் தொடங்கியது. இந்த விடய சம்பந்தமாக பொன்சேகா எப்போதும் இலங்கை இராணுவத்திற்கு ஆதரவான முறையில் அதற்குப் பாதுகாப்பாக செயற்பட்டவராயிருந்தார். இந்த் விதமாக 2010 தொடக்கம் 2014 காலப் பகுதியின் முரண்பாட்டு நிலைகளுக்கான விளக்கத்தினை கொடுக்கவேண்டிய நிலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு என்றாயிற்று.

நம்பகத்தன்மை விடய சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஐ.நா. மனித வுரிமைச் சபையானது இலங்கை இராணுவத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளையுங்கூடவேபொறுப்புக் கூறவேண்டியவர்களாயிருப்பதாக தீர்மானிக்குமானால் விளைவு என்ன என்ற கேள்வியை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தன்னைத் தானே கேட்டுக்கொள்ளவேண்டும். எதுவாக இருப்பினும் இலங்கை இராணுவத்தின் நடத்தைக்காக மட்டும் அரசாங்கம் ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பொன்சேகா தாமே பொறுப்புக் கூறவேண்டியவர்களாயிருப்பர்.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பிரச்சினையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு இட்டுச் செல்வதா கவும் அமையலாம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என். சத்திய மூர்த்தி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளி யானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. -தமிழில் யோகர்-

இரண்டு விதத்தில் பொறுப்புக்கூறவேண்டிய நிலையிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தப்பிவிட முடியாது. தமிழீழ விடுதலைப்புலி விடயத்தில் அப்போதோ இப்போதோ எவ்வளவு காலத்திற்கென்றாலும் அதற்கான அரசியல் பொறுப்புணர்வு அதற்கேதான் உண்டு. பொன்சேகாவுக்கு வாக்களித்ததன் மூலம் நம்பகத்தன்மை மட்டிலும் போருக்குப் பிந்திய உண்மைநிலைமைகள் மட்டில் அதற்கான அரசியல் பொறுப்புணர்வு ரீதியிலும் பொறுப்புக்கூறுவதிலிருந்து அது தப்பிவிட முடியாது.

ஐ.நா. மனிதவுரிமை சபையின் குற்றவிசாரணைகளுடன் இலங்கை அரசு ஒத்துழைக்கிறதோ இல்லையோ எப்படியிருப்பினும் போர்க் குற்றங்களுக்கான அரசியல் நம்பகத்தன்மை இலங்கை இராணுவம் மட்டில் அரச தலைமையின்மீது சுமத்தப்படுமானால் அதே விதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டிலான பொறுப்பும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீது சுமத்தப்படும் என்பதுடன் அதிலிருந்து தப்பிக்க அதனால் முடியாது. இதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுபடுவதற்கான வாய்ப்பெதுவும் நியாயவாதப்படி அரச தலைமைக்கான சம சந்தர்ப்பமாகவே அமைவதாயிருக்கும்.

அரச தரப்பிற்கும் அரசில்லாத மறுதரப்பிற்குமிடையிலான ஆறு அல்லது எட்டுவேறுபாடுகள் குற்ற ஒப்புதல் வாக்குமூல நியாயங்களாக முன்வைக்கப்படுவது நிச்சயம். இருந்தாலுங்கூட அன்றும் இன்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசியல் அமைப்பிற்குட்பட்ட அரசியல் கட்சி என்பதுடன் அதனது தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளனைவரும் 6ஆவது சட்டத் திருத்தத்தின்கீழ் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டவர்களே என்பது நியாயப் படியான ஒரு உண்மையேயாகும்.

## வெளியார் சம்பந்தம்

அப்போதுங்கூட முரண்பாடுகள் தொடர்ந்தும் எழுந்து கொண்டுதானிருக்கும். பிரதான இடதுசாரியான மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற அரச தரப்பு தேசிய சுதந்திர முன்னணி வாய்மூடி மௌனியாக இருந்தாலும் பிரதான மக்கள் விடுதலை முன்னணியும் பிரதான இடது சாரியாகிய ஜாதிக ஹெல உறுமயவும் அதிகாரப் பரவலாக்கம் மட்டில் ஏமாற்றுவதான கவர்ச்சிகர வாதங்களை எழுப்புபவர்களாயிருப்பர்.

தமிழ்ச் சிறுபான்மைச் சமூகத்தின் உள்ளகப் பிரச்சினைகளை நாட்டிற்குள்ளாகவே தீர்ப்பதற்கென கலந்துரையாடுவதுடன் இது மட்டில் வெளியார் சம்பந்தப்படுவதை மட்டுமே தாம் எப்போதும் [illegible]வர்கள் என்பதே இவர்களது [illegible]மாக இருந்து வருகிறது. இந்தியாவுக்கெதிராகவோ 13-A, நோர்வே, ஐ.நா., அமெரிக்கா போன்றவற்றுக்கெதிராகவோ அல்லது வெகு அண்மையில் தென்னாபிரிக்காவுக்குமெதிராக தமது எதிர்ப்பினை இவர்கள் எப்போதுமே வெளிப்படுத்தி வருகின்றனர்.பேரொலியுடன் கூடிய ஆர்ப்பாட்ட பேரணிகளாகவே எப்போதுமிருக்கும் இவர்களது எதிர்ப்பியக்கங்கள் சில வேளைகளில் கட்டுப்பாடுகளற்ற வன்முறையுடன் கூடியவையாகவுமிருந்திருக்கின்றன.

செயற்படவேண்டிய விதத்தில் அல்லாத ஒருவித அசாதாரண செயற்பாட்டைக் கொண்ட பாராளுமன்ற செயற்குழுவில் இணைந்திருக்கும் ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய குறிப்பான இரு கட்சிகளும் அதிகாரப் பரவலாக்கல் விடயம் மட்டில் தாம் வெளிப்படையான மனப்பாங்குடன் இருப்பதாகவும் குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் பிரத்தியேகமான உள்ளகச் செயற்பாடுகளாகவே இருக்கவேண்டுமென்ற தமது நம்பிக்கையையே உறுதிப்படுத்துமென்ற எதிர்பார்ப்புடனே காத்திருக்கின்றனர். பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பேசப்படும் விடயங்களின் பெறுமானங்கள் தகைமைகள் சரிதானா என்ற மட்டில் அவற்றை தடுத்து மறிக்கும் பொதுபல சேனாவின் வன்செயல் முறைகளையுங்கூட இவர்கள் ஆரவாரித்து ஆதரிப்பவர்களேயாவர்.

சிங்கள பௌத்த மக்கள் அமைப்புக்களிடையே மிதவாதிகள், கடும்போக்கினர் ஆகிய இருபாலார் மத்தியிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு மட்டிலிருக்கக்கூடிய எந்தவிதக் கருத்துக்களையோ ஆர்வத்தையோ குழப்பும் விதத்தில் பெரும்பான்மை சமூகத் தலைவர்களிடையே இந்த இடைக்காலத்தின்போது தமது செயற்பாடுகளை இவர்கள் மேற்கொண்டிருக்க தமிழ் மக்களிடையே தொடர்ந்து கொண்டிருக்கும் துன்பியல் வாழ்க்கை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு பக்கம் தெளிவுபடுத்தும் அதேநேரம் ஏனைய தரப்பினரிடையே உள்ள பிரச்சினைகளில் சிலவற்றையாவது தெரிந்துவைத்திருப்பதும் நன்மையாயிருக்கும். ஏனென்றால் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளுங்கூட அடிப்படையில் இவைகளிரண்டிற்கும் இடையிலேயே கண்டுகொள்ளப்படவேண்டியவையாகும்.

தமிழ்ச் சமூகத்தினது சட்டபூர்வமான அபிலாசைகள் மட்டில் சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் குரலெழுப்பி ஆதரவு தரவேண்டுமென்ற எதிர்பார்பில் தமது தமிழின முன்னைய மிதவாத முன்னோடித் தலைமைகள் போல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் அவ்விதமே தொடர்ந்தும் கண்ணற்ற குருடராகவும் காது இல்லாத செவிடராகவும் இருந்து விடமுடியாது. சிங்கள மக்களுக்கிருக்கும் அங்கலாய்ப்புக்கள் துன்பியல் வேதனைகள் மட்டில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராமுகமாக செயற்படவும் கூடாது.

அரசியல் பேச்சுவார்த்தையென்பது வீதியின் இருவழிப்பாதைப் போக்குவரத்துப் போன்ற ஒன்றே என்பதுடன் பொதுவான ஒரு மையக் கட்டுப்பாட்டிற்கான பல்பிரச்சினை சார்ந்ததேயாகும்.இது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை சார்ந்ததோ அல்லது இனப்பிரச்சினை சார்ந்ததோ எதுவாக இருப்பினும் தேசிய அக்கறைக்குரிய ஓர்விடயமேயாகும் என்பதால் குறைந்தது தேசிய பெரும்பான்மை அடிப்படையிலான கருத்தே இதற்கான தீர்-வினைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய நடைமுறைக் கருத்தாகிய பாராளுமன்றத் தெரிவுக்குழு அல்லது அதனிலும் விரிவாக்கம் பெற்ற ஒரு செயற்குழுவே அதற்கான தெரிவாகவோ அல்லது வழியாகவோ தொடர்ந்தும் இருப்பது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

891

# குள்ள நரியின் குறும்பு!

தென் இந்தியாவின் ஒரு பகுதியில், மகிழா ரூப்பியம் என்னும் நகரம் இருந்தது. அது இந்திர லோகத்துக்கு இணையானது.

வர்த்தகமானன் என்னும் வணிகன் ஒருவன் அந்த நகரத்தில் வாழ்ந்து வந்தான். அவர் நற்குணங்கள் நிரம்பியவன். நாணயமானவன். அதிர்ஷ்டவசத்தால் பெருஞ்செல்வம் அவனிடம் குவிந்திருந்தது.


ஒருநாள் இரவு படுக்கையில் படுத்திருந்த அவனுக்குத் தூக்கமே வரவில்லை. ஆழ்ந்த யோசனையுடன் புரண்டு புரண்டு படுத்த வண்ணமிருந்தான் அவன். பாடுபட்டு சேகரித்த செல்வம் அவனிடம் நிறையவே இருந்த போதிலும் அதை உட்கார்ந்த இடத்திலிருந்த படியே செலவழித்துக் கொண்டே போனால் மைபோல் அது கரைந்து போய்விடுமே என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டது.

சேர்த்த செல்வம் சொற்ப அளவுக்கே இருந்தாலும், அதை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டேபோனால் எறும்புப் புற்று போல் அது பெருகிக்கொண்டே இருக்கும். செல்வம் அதிகமாக இருந்தாலும் அதை மேன்மேலும் பெருக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்; பெறாத செல்வத்தைப் பெற முயல வேண்டும்; பெற்றதைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றியதை விருத்தி செய்து அதைப் பல துறைகளிலும் முதலீடு செய்ய வேண்டும். எதற்கும் பயன்படாத வகையில் பத்திரப்படுத்தி வைக்கப்படும் செல்வம் கூட பலவித இடையூறுகள் ஏற்பட்டு நாளடைவில் நாசம் அடைந்துபோகும். வாய்ப்புக்கிடைக்கும் போது தகுந்த விதத்தில் முதலீடு செய்யப்படாத பணம், கைக்கு வராத பணத்துக்குச் சமம். ஆகவே, கிடைத்த பணத்தைப் பாதுகாத்து பெருக்கி சிறந்த முறையில் முதலீடு செய்ய வேண்டும்.

சேர்த்த பணத்தைக் காக்க வேண்டும் என்றால், அதைப் புழக்கத்துக்குக் கொண்டு வர வேண்டும். குளத்தில் நீர் அதிகமாக இருந்தால் அது வடிவதற்கான வடிகால்கள் நிறைய இருக்க வேண்டும் அல்லவா? பழக்கிய யானைகளைக் கொண்டு காட்டு யானைகளைப் பிடிப்பதுபோல பணத்தைப் போட்டுத்தான் பணத்தை ஈட்ட வேண்டும். ஆசை மட்டும் இருந்து கையில் பணம் இல்லாத ஓர் ஏழையால் வியாபாரம் எதையும் செய்ய இயலாது. விதியால் தன்னிடம் குவிந்த செல்வத்தைத் தானும் அனுபவியாமல் நற்காரியங்களுக்கும் அதைச் செலவிடாமல் இருப்பவன் வாழ்வில் சுகம் பெற மாட்டான். அவனைப் பணம் படைத்த முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும் என்று எண்ணத் தொடங்கினான் வர்த்தகமானன்.

இரவு முழுவதும் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த அவன், பொழுது புலர்ந்ததும் வியாபாரத்துக்குச் தேவையான சரக்குகளைச் சேகரித்தான். ஒரு நல்ல நாளில் பெற்றோரிடம் விடைபெற்றுக்கொண்டு வேலையாட்களை உடன் அழைத்துக் கொண்டு சங்கு, பேரிகை முழங்க மதுராபுரிக்குப் புறப்பட்டான். உறவினர், நண்பர்கள் வாழ்த்துக் கூறி அவனை வழியனுப்பி வைத்தார்கள்.

வெண்மேகம்போல் ஒளி பொருந்திய நந்தகன், சஞ்சீவகன் என்னும் இரண்டு எருதுகள் பூட்டிய வண்டியில் எருதுகளின் கழுத்திலிருந்த சலங்கைகள் ஜில்ஜில் என ஒலிக்க, சரக்குகள் ஏற்றப்பட்டன. அங்கிருந்த மற்றொரு வண்டியில் வர்த்தமானனும் ஏறிக்கொண்டு அங்கிருந்த புறப்பட்டான்.



வழியில் காட்டில் செடிகொடிகளும் பல வகை மரங்களும் நிறைந்திருந்தன........ ..............

(தொடரும்)



## 08.2014 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1415 - நூறு ஆண்டுப் போர்: இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் 8000 பேருடன் பிரான்சை அடைந்தான்.
- 1516 - புனித உரோமப் பேரரசன் ஐந்தாம் சார்ல்ஸ் நேப்பில்சையும் பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் மிலானையும் உரிமை கொண்டாட இரு நாடுகளுக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1849 - யாழ்ப்பாணம் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.
- 1913 - ஹரி பிறியர்லி துருப்பிடிக்காத எஃகுவைக் கண்டுபிடித்தார்.
- 1920 - போலந்து - சோவியத் ஒன்றியம் போர் ஆரம்பமாயிற்று. ஆகஸ்ட் 25 இல் முடிவடைந்த இப்போரில் செம்படையினர் தோற்றனர்.
- 1937 - ஷங்காய் சமர் ஆரம்பமானது.
- 1954 - பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன் முறையாக வானொலியில் ஒலிபரப்பியது.
- 1960 - மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1961 - ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லாவண்ணம பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.
- 2004 - கறுப்பு வெள்ளி: மாலைதீவுகள் தலைநகர் மாலேயில் இடம்பெற்ற அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டம் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.
- 2004 -28 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஏதென்ஸில் ஆரம்பமாயின.

### பிறப்புகள்

- 1899 - ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் (இ. 1980)
- 1924 - டி. கே. மூர்த்தி, கர்நாடக இசை மிருதங்க வித்துவான்
- 1926 - ஃபிடெல் காஸ்ட்ரோ, கியூபாவின் புரட்சியாளரும் அதிபரும்

### இறப்புகள்

- 1910 - புளோரென்ஸ் நைட்டிங்கேல், ஆங்கிலத் தாதி (பி. 1820)
- 1917 - எடுவர்டு பூக்னர், ஜெர்மனிய வேதியியல் அறிஞர் (பி. 1860)
- 1946 - எச். ஜி. வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1866)

### சிறப்பு நாள்

- அனைத்துலக இடக்கையாளர் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு இடதுகை பழக்கமுடையோர் நாள்



பன்னாட்டு இடதுகை பழக்கமுடையோர் நாள் ஆகஸ்ட் 13 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. "பன்னாட்டு இடக்கை பழக்கத்தவரின் நிறுவனம்" இந்நாளைக் கொண்டாடி வருகின்றது. இது முதன் முதலில் 1976 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

உலகளாவிய ரீதியில் மொத்த மக்கள் தொகையில் 7-10 விழுக்காட்டினர் இடதுகை பழக்கமுள்ளவர்கள் என கணிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இந்த இடதுகை பழக்கமுடையவர்கள் சிறுபான்மையாளராக இருப்பதனால் சமூகத்தில் பல்வேறுபட்ட சிரமங்களை அவர்கள் எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது.


இந்த இடதுகைப் பழக்கம் பிறப்பிலே சிலருக்கு ஏற்படுகின்றது. மூளையானது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை; மூளையம், மூளி சிறுமூளை மற்றும் நீள்வளைய மைய விழையம். இவற்றில் மூளையம் (பெருமூளை) இரண்டு அரைக்கோள வடிவில் உள்ளது.

இடதுபக்க அரைக்கோளம் உடலின் வலதுப்பக்க உறுப்புகளையும், வலதுப்பக்க அரைக்கோளம் உடலின் இடப்பக்க உறுப்புகளையும் இயக்குகின்றன. இதில் பெரும்பாலானோருக்கு இடப்பக்க அரைக்கோளம் சற்று மேலோங்கியதாக இருக்கும். இதனால் அவர்களுக்கு வலப்பக்க உறுப்புகள் சிறப்பாக செயல்படுகின்றன. ஆனால் ஒரு சிலருக்கு வலப்பக்க அரைக்கோளம் மேலோங்கி செயல்படுவதால் இடது கை பழக்கம் ஏற்படுகிறது.

இடக்கைப் பழக்கமுள்ள குழந்தைகளை சில பெற்றோர்கள் குழந்தைப் பருவத்திலேயே வலக்கைக்கு மாற்றுவதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்வர். இந்தப் பழக்கத்தை இவர்கள் மாற்ற முயற்சி செய்தால் பேச்சிலும், பார்வையிலும் குறைபாடுகள் ஏற்படலாம் என்கிறது அறிவியல்.

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"



## தேம்பித் தேம்பி அழுத சச்சின்

34

...மூன்றாவது டெஸ்ட் போட்டி ஆக்லாந்தில் துவங்கியது. சச்சின் இந்தப் போட்டியில் எடுத்தது ஐந்து ரன்கள் மட்டுமே. இந்த மேட்சும் டிராவில் முடிய சச்சினுக்கு உலக சாதனையைப் படைக்க மீண்டும் வாய்ப்பு கிட்டவே இல்லை. நியூசிலாந்து அந்தத் தொடரை 1-0 என்ற கணக்கில் வென்றது.

இதனை அடுத்து 1990 ஆம் ஆண் இந்தியா - ஆஸ்திரேலியா நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகள் துவங்கின.

முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் சச்சின் சரியாக ஆடவே இல்லை.

ஒரு போட்டியில் பூஜ்ஜியத்தில் ஆட்டம் இழந்தான். தொடர்ந்து இரு மேட்சுகள் ரன் எதுவும் எடக்காததால் சச்சின் மூன்றாவது டெஸ்டுக்கு தேர்வு செய்யப்படவில்லை.

பின்னர் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான நான்காவது டெஸ்டில் சேர்க்கப்பட்டான். 39 பந்துகளில் 36 ரன்கள் 4(மு4). இருப்பினும் அடுத்தடுத்து நடைபெற்ற போட்டிகளில் சச்சின்



தேர்வு செய்யப்படவில்லை.

இறுதிப் போட்டியில் நுழையத் தகுதி பெறாமலேயே இந்தியா படுதோல்வி அடைந்தது. இந்தியாவிற்கு மட்டுமன்றி தனிப்பட்ட முறையில் சச்சினுக்கும் இந்திப் பயணம் தோல்வியிலேயே முடிந்தது.

அதே ஆண்டு ஏப்ரல் மே மாதத்தில் வளைகுடா நாடான ஷார்ஜாவில் ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் ஆஸ்திரேலிய ஆசிய கோப்பைக்கான பந்தயம் நடைபெற்றது.

இந்தியவிற்கும் சச்சினுக்கும் மீண்டும் ஏமாற்றம் பிபிரிவில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளிடம் இந்தியா தோற்கவே அரை இறுதிக்குக் கூடத் தகுதி பெறாமல் இந்தியா வெளியேறியது.

இந்த இரு ஆட்டங்களிலும் சச்சின் எடுத்தது 10 மற்றும் 20 ரன்கள் மட்டுமே. 5 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு சச்சின் எடுத்த மொத்த ரன்கள் 66 தான்.

நியூசிலாந்து மற்றும் ஷார்ஜா ஆகிய நாடுகளில் நடைபெற்ற போட்டிகளில் சச்சின் எதிர்பார்த்த அளவு ஆடவே இல்லை.

செஞ்சுரி அடித்திருந்தால் மிகக் குறைந்த வயது கிரிக்கெட் வீரன் என்ற பெருமை தனிப்பட்ட முறையில் அவனுக்கும் இந்தியாவிற்கும் கிடைத்திருக்கும்.

ஆனால், எதுவுமே நடைபெறாத நிலையில் சச்சினின் இந்த சுற்றுப் பயணத்திற்கு சச்சின் தேர்வு ஆக மாட்டான் என்பதே அனைவரின் கணிப்பாக இருந்தது.

ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பாக சச்சின் ஏற்கனவே இரண்டு முறை இங்கிலாந்து பயணித்து இருக்கிறான் என்றாலும், இந்தமுறை டெஸ்ட் போட்டிகளில் விளையாட அவன் இங்கிலாந்து போவானா மாட்டானா என்ற கேள்வியே ரசிகர்களின் மனதில் மில்லியன் டொலர் கேள்வியாக இருந்தது.

> ஒருவிதத்தில் சச்சின் அவுட் ஆனது எங்கள் அணிக்கு நல்லதுதான். அதே சமயம் சச்சின் ஆட்டத்தை நான் ரசித்துக்கொண்டிருந்தேன் என்பது தான் உண்மை. செஞ்சுரி அடிக்க எல்லாத் தகுதிகளையும் கொண்ட திறமையான இளைஞன் அவன். ஆனால், மிக எளிதான அந்தக் காட்ச்சை நான் பிடிக்காமல் இருந்திருந்தால் எனது அணிக்கு நான் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியிருப்பேன்!

கே. ரமேஷ் (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 08 இன் பலன்கள்



64

### தோற்றம்

உயரமாக, ஒல்லியாக இருப்பர். முழுச் சனி ஆதிக்கத்தில் சனியுடன் சனி சேர உள்ளவர். முகம் உருண்டையாக களையாக இருக்கும். சுருட்டை முடியிருக்கும். சிவப்பாகவே இருப்பார். உடல் உறுதியாக இருக்கும். கண்கள் துறுதுறுவென இருக்கும். வாய் சின்னது. பற்கள் வரிசையாக அழகாக இருக்கும். ஆனால் உறுதியற்றவை. கைகால்கள் நீளமாக இருக்கும். ஒடுங்கிய முகம் நீண்டு அளவான பருமனுடன் இருக்கும். நெற்றி சுமாரான அகலம் இருக்கும்.

### குணம்

சில சங்கதிகளில் துணிச்சல் உள்ளவர். காரிய வெற்றிக்கு தந்திரமாகச் செயற்படுவர். காரியம் முடியக் கச்சிதமாகப் பேசுவர். ரகசியத்தை வெளியிடவே மாட்டார். சாதகமான செயல் எதுவாக இருந்தாலும் செய்யாமல் விடமாட்டார். வாயரட்டை, ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டார். கோபம் அபாரமாக வரும். ஆத்திரப்பட்டால் அழிவுச் செயலும் செய்திடுவர். பழிவாங்காமல் விடார். தீர்மானித்துவிட்டால் வைராக்கியமாக இருந்திடுவார்.

சாதாரணமானவராகவே இருப்பார். எண்ணியதை முடிக்க கடுமையாக உழைப்பார். வென்று காட்டிடுவார். அதிகம் பேசவே மாட்டார். சாதாரண நிலையிலிருந்து உதவியின்றிச் சுயமாக மேலுக்கு வந்திடுவார்.

இளம் வயதிலேயே தந்தையை இழந்திருப்பார். தாய்ப்பாசம் அதிகம் உள்ளவர். வறுமை, சோகம், காதல் தோல்வி எல்லாம் வரும். ஆனால், தொடர்ந்து முன்னேறுவர். இவர் உழைப்பே காரணம். கடும் தலைவலி உண்டு. வயிறும் பாதிக்கும். கால்களை தோல்நோய் சிறுவயதில் பாதிக்கும். உடல் அடிக்கடி படுத்தினாலும் அளவோடு பள்ளிப்படிப்பு முடிந்தாலும்கூட ஒரே இடத்தில் வேலை செய்து உழைப்பர்.

தோல்வி துயரம் எது வரினும் விதியென யாரிடமும் கூறாமல்; தாமே அனுபவிப்பர். அடுத்து ஆக வேண்டியதைப் பார்ப்பர்.

அடிதடி வம்பு என உடலால் சண்டையிட மாட்டார். தெய்வ பக்தி இருக்கும். பிறருக்கும் அவசியமான உதவிகளைப் புரியும் இரக்க குணம் இருக்கும். யோகம், வேதாந்தம் மனதைக் கவரும். மதம் வளர தம் தெய்வம் மொழி புகழோங்க வேலை செய்வார். நகைச்சுவை உணர்வு மிகும். ஆட்களை நன்கு எடைபோட்டு ஏற்ப நடத்துவர்.

பார்த்தவுடன் இவரை யாரும் எடைபோட இயலாது. பூனை போலிருந்து புலி போல பாய்ந்து வெற்றியை பெறுவர். இவர்களை எதிர்த்து சாதாரணமாக யாரும் வெல்ல முடியாது. நிறையக் கண்காட்சி காணுவர். வேண்டியவரையும் அழைத்துப் போவர். சாமர்த்தியம் இல்லாதவரை இவர்களுக்குப் பிடிக்காது. தற்பெருமை இருக்கும். வயதாக வயதாக விளையாட்டெல்லாம் போய் விரக்தி மன நிலை அடைவர்.

### குடும்பம்

சகோதரர்களுடன் பிறந்தாலும் தனியாகவே இருப்பர். சிறு பருவத்திலேயே தந்தையை இழந்திருப்பர். தாய் மீது பாசம் அதிகமிருக்கும். உறவினர்களைப் பிடிக்காவிட்டாலும் தந்தை வழியினரைத் தாய்க்காகச் சகித்துக் கொள்வார். படிப்பு தடைப்படும். ஆனால், சுயமாகச் சம்பாதித்துத் தாயை வாழ வைப்பர். காதல் விளையாட்டெல்லாம் அறியாப் பருவத்தில் நடந்திருந்தாலும் வம்புகளால் பாதிக்கப்பட மாட்டார். ஆனால், பெரியோர் நிச்சயித்தபடி திருமணம் முடிப்பர். அநேகமாக வாரிசு பிறக்காது. ஒன்று பிறந்தாலும் தோஷம் உண்டு. நண்பர், உறவினருடன் உறவுமின்றிப் பகையுமின்றி வாழ்க்கை நடத்துவர். வேறு பெண் தொடர்பு ஏற்படும். மண வாழ்க்கை திருப்தியாயிராது. பெயரெண் நன்கு அமைந்தால் குடும்பம் தொடர்ந்து நடக்கும். ஏதாவதொரு குறை குடும்பத்திலிருக்கும்.

### தொழில்

கடும் உழைப்பிற்கு தயாரான இவர்கள் தம் ஆதரவற்ற நிலையுணர்ந்து ஏதாவது ஒரு வேலை செய்து பணம் சம்பாதிக்க நினைப்பர். தியேட்டரில் டிக்கட் தருபவராக, ரயில்களில் கரியள்ளிப் போடுபவராக ஓட்ட லில் சர்வராக, சமையற்காரராக என்றெல்லாம் வேலை பார்த்துக் காலம் ஓட்டுவர். தொழிற் சாலையில் லேபராக, டைப்பிஸ்டாக, சுரங்கத் தொழிலாளியாக வேலையில் சேருவர். சிறுகடை வைப்பர். கடையே இன்றி வியாபாரம் ஏதாவது சின்னதாகச் செய்வர். துக்கத்தை அடக்கி முயற்சியாக வெளியிடுவர். நான்கு சங்கதிகளையும் தெரிந்து வைத்திருப்பர். கிடைத்த நல்ல வேலையை விடவே மாட்டார். இங்கிதமாக நடந்து காப்பாற்றிக் கொள்ளுவர். இரும்பு மோட்டார் வாகனத் தொழிற்சாலைப் பணி மிகப் பொருத்தமாகும். அச்சுத் தொழிலும் பதிப்பகத் தொழிலும் செய்யலாம். ஆன்மிக மதச் சொற்பொழிவாளர்களாக பணிபுரியலாம். அரசியலிலும் பிரபலமடையலாம். பேச்சாளராக இருக்கலாம். சினிமாவில் நடிக்கலாம். துறவிகளாவும் முடியும்.

### நோய்


தலைவலி, வயிற்றுத் தொல்லை, ஹெர்ணியா, நீரிழிவு, பல், ஈறு நோய்கள் வரும். வாதத் தொல்லைகளான மலச்சிக்கல், மூட்டு கழுத்து முதுகு வலிகள் வரும். அஜீரணமும், மூல நோயும் சிறுநீரகப் பாதை பாதிப்பும் உண்டு. அறுவை சிகிச்சைகளும் நடந்திருக்கும். பி.பி. இதயக் கோளாறு உண்டாகாமல் கனவமான இருக்க வேண்டும். கால்களில் அடிக்கடி பாதிப்பு ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த விரோத சட்டத்தை அமுல்படுத்த அரசு தயார் !

## ரணில் குற்றச்சாட்டு



அரசாங்கம் பௌத்த விரோத சட்டங்களை அமுல்படுத்த முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். பௌத்த மஹாநாயக்க தேரர்களையும் பௌத்த விஹாரைகளையும் பாதிக்கக் கூடிய வகையிலான சட்டமொன்றை அரசாங்கம் அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சியானது சட்டவிரோதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த ஆணையாளர் நாயகம் என்ற ஒரு பதவியை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தற்போது நடைமுறையில் உள்ள ஆணையாளர் நாயகத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டவை எனவும், அவை மஹாநாயக்க தேரர்களின் அதிகாரத்தை விடவும் குறைந்தவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் புதிய சட்டத்தின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தினால் பௌத்த மஹாநாயக்க தேரர்களையும் கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்துள்ளார். அரசாங்கம் பௌத்த கொள்கைகளை இராணுவ மயப்படுத்த முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (6)

# உபுல் ஜயசூரியவின் பாதுகாப்பு உறுதி!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை ஏற்பதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

உபுல் ஜயசூரியவிற்கு இரண்டு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில் கூறியுள்ளார்.

உபுல் ஜயசூரியவின் வீடு, அலுவலகம், அவர் சென்று வரும் இடங்களில் அவரது பாதுகாப்பு குறித்து அறிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவை சேர்ந்த 27 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அனுர சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, தான் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளை அறியாத காரணத்தினால் தன்னை பின் தொடர்வது புலனாய்வாளர்களா அல்லது வேறு நபர்களா என்பதை அறிந்து கொள்வது சிக்கலானது என கூறியுள்ளார்.

இதனால் அந்த புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளை தனக்கு தனிப்பட்ட ரீதியில் அறிமுகம் செய்து வைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து கலந்துரையாடி பின்னர் அறிவிப்பதாக அனுர சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

உபுல் ஜயசூரியவை பின் தொடர்ந்த இனந்தெரியாத நபர்கள் பற்றிய விசாரணை தகவல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சேனாநாயக்க, சட்டத்தரணியை பின் தொடர்ந்தவர்களின் காட்சிகள் தெளிவாக பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியிருப்பதாக கூறியுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களினால் தான் இந்த விசாரணையில் இருந்து ஒதுங்கி கொண்டதாகவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்னவின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணைகள் நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட உள்ளது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடமபெற்று வருகின்றது.

இன்றைய இசையரங்கு நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக பாடல் எஸ்.சிவமைந்தனும் வயலின் எ.ஜெயராமனும் மிருதங்கம் எம்.லோகேந்திரனும் வழங்கவுள்ளதோடு, அடுத்த நிகழ்வாக இடம்பெறவுள்ள இசையரங்கில் பாடல் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவும் வயலின் எ.ஜெயராமனும் மிருதங்கம் எஸ்.மகேந்திரனும் கடம் எ.செல்வரட்ணமும் வழங்கவுள்ளனர்.

### இசைநிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும்மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக நிஷேதனா கார்த்திகேயக் குருக்கள் வழங்கும் இசையரங்கம் இடம்பெறவுள்ளது.

### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயணஇசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணிதொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ.சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் சீதா கல்யாணம் எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம்பெறவுள்ளது.


### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் விகடகவி மு.திருநாவுக்கரசு ஆற்றவுள்ள அண்ணனும் தம்பியும் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் சங்கானை மாவடி ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை அனலைதீவு மனோன்மணி அம்மன் அறநெறிப் பாடசாலை, காரைநகர் பண்டத்தரப்பான் புலம் சிவகாமி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்திட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக ஆளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் நல்லூரான் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதின்மூன்றாம் திருவிழா



## என் மனம் கொள்ளை கொள்ளுதையா



அழகிய கந்தா அலங்கார வேலவா
தகதகவென மின்னும் கந்தா
தங்க வேல் கொண்டவனே
சேவல் கொடியோனே
அனுதினம் இருவேளையும்
வகைவகையான அலங்காரம்
ஒய்யாரி இருவருடன் உன் கொள்ளையழகு
உன் அற்புத அழகு கண்டு
என் மனம் கொள்ளை கொள்ளுதைய்யா

வ.பவளகேசி, கொய்யாத்தோட்டம்.

## நல்லைக்கந்தனே போற்றி போற்றி

ஓங்காரமானவனே போற்றி
ஓம் என்னும் பிரணவப்பொருளே போற்றி
சிங்கார வேலவனே போற்றி
சிறந்த தமிழ்குமரனே போற்றி
பானை வயிற்றோனின் பாசமுள்ள சகோதரனே போற்றி
கான மயில் வாகனனே போற்றி
மாய சூரனை வதைத்தவனே போற்றி
யாமிருக்க பயமேன் என
அபயம் அளிப்பவனே போற்றி
வேலுண்டு வினை தீர்க்க என வீரம் தருபவனே போற்றி
கருணை கொண்ட
நல்லைக்கந்தனே போற்றி! போற்றி!!

அனுஷ்சிகா சிவயோகலிங்கம், நாயன்மார்கட்டு.

## அருள் வேலவா

ஆனைமுகன் தம்பியே - வேலவா
அன்பர்க்கருள் புரிந்திடையா - வேலவா
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே - வேலவா
அனலடக்க மழை சொரியும் - வேலவா
ஆடும் மயில் வாகனனே - வேலவா
அரக்கர் குணம் போக்கிடுவாய் - வேலவா
அப்பனே நல்லூர்க் கந்தன் - வேலவா
அடியவர் நாம் சரணடைந்தோம் - வேலவா

அ.பத்மினி, யா/உ.இராமநாதன் ம.வி.

## சொந்தமென்றும் நீயே!



சுந்தரவேல் முருகா! உந்தன்
தூய கோயில் வலம்வரவே
எங்கள் அல்லல் நீக்கிவிடு!
என்றும் நீயே சரண் எமக்கு
நொந்த உள்ளம் மலர்ந்திடவே
நொடியில் வந்து உன்னருள்செய்!
சிந்தை கொண்டு உன் நினைவே
செல்வமென நிறைவு கொள்வோம்!
சொந்தமென்றும் நீயல்லவோ?
சோதிமணியாய் விளங்கும்
கந்தவேளே! உன் கழல்கள்
காவல் செய்யும் அரண் எமக்கே!

கலாஞானி, கதிரேசு - சிவலிங்கம்.

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

தூய மனத்தோர் துயர் துடைத்துத்துட்டர்களின்
மாயச் செயலறுத்துவளஞ்சேர்ப்பான் - நேயமுடன்
நல்லைக் குமரன் நான்கு மறை நீதிநெறி
நல்கிடுவான் என்று நம்பு


கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் ஆண்டகையை கைது செய்ய வேண்டும்

## எல்லை மீறும் பொதுபலசேனா

**பாம்பு கடிக்கிறது என்று கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல் அப்பாம்பை அடித்துக் கொல்ல வேண்டும் என்று இறுமாப்புடன் கூறியுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர். மன்னார்ஆயர்வணக்கத்திற் குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையை கைது செய்து சட்டத்தின்முன்நிறுத்தி சிறையில் அடைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.**





நாட்டையும் பாதுகாப்பு படையினரையும் தொடர்ந்தும் காட்டிக் கொடுப்பவரை கைது செய்வதற்கு அரசாங்கம் ஏன் பின்னிற்கின்றது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பாக ஆராய்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைகள் குழு மீது நம்பிக்கை இல்லையென்றும் எனவே அக் குழுவிற்கு சாட்சியமளிக்க தயாரில்லை என்றும் எனவே அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதாகவும் மன்னாரில் இடம் பெற்ற விசாரணையின் போது ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தமை தொடர்பாக தமது பக்க நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய போதே ஞானசாரதேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தேரர் மேலும் தெரிவிக்கையில்

ஆயர் இராயப்பு ஜோசப் தொடர்ந்தும் இலங்கைக்கு எதிராகவும் எமது படையினருக்கு எதிராகவும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது. இராயப்பு ஜோசப் இலங்கையின் அரசியலமைப்பையும் சட்டங்களையும் மீறி செயற்படுகின்றார். இறுதிக் கட்ட யுத்தத்தில் எமது படையினர் கொத்து குண்டுகளை மக்கள் மீது பொழிந்தனர் எனறும் சர்வதேச ரீதியில் பிரசாரத்தை இவரே முன்னெடுத்தார். பாம்பு கடிக்கிறது என கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல் அப்பாம்பை அடித்துக் கொல்ல வேண்டும். அதே போன்று தேசத்துரோக செயலில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் இராயப்பு ஜோசப்பை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென்றும் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்தார். (6)

## சிங்கள பௌத்தர்களும் அஞ்சிய காலமிருந்தது




நாட்டில் சிங்கள பௌத்தர் எனச் சொல்லிக்கொள்ள அஞ்சிய காலமொன்று இருந்ததாகவும் அதனை பலர் மறந்து விட்டதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

புனித மக்காவிற்கு யாத்திரை மேற்கொள்ளும் முஸ்லிம்களுக்கு நீண்ட தூரம் நடை பயணம்செய்ய வேண்டியுள்ளதாகவும், கத்தோலிக்க பக்தர்கள் தங்களது யாத்திரைத் தலங்களுக்கு நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனையும் மருத்துவ முக்கியத்துவமும்



பனை யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல உலகிற்கே ஒரு கற்பக தரு பனையின் வேரிலிருந்து இளங்குருத்து வரை எம்மவர்களின் இல்லங்களில் பண்டைய காலந் தொட்டே கூரையிலிருந்து நிலம் வரை தலைவாயிலில் இருந்து சமை யலறை வரை பரந்து கிடப்பது கண்கூடு.

பனையிலிருந்து கிடைக்கும் பாகங்களில் முக்கியமானவற்றுள் பனம்பழமும் ஒன்றாகும். பனங்களியில் (பனம்பழத்தின் சதைப் பற்றான பகுதி உயிர்ச்சத்து A காணப்படுவதுடன், மலமிளக்கிச் செய்கையை செய்வதால் குடலைச் சுத்தப்படுத்தக் கூடியதாகவும் காணப்படுகிறது.

பனங்களி பனங்காய்ப் பணியாரமாகி உணவாவதுடன் சருமத்திற்குப் பூசுவதால் சருமம் மென்மை யடைந்து பிரகாசம் வீச வைப்பதால் அழகு சாதனமாகவும் பயன்படுகிறது.

பனங்களியை தினமும் பூசும் போது ஒவ்வாமை ஏற்படுமாயின் பனம்பழத்தைச் சுட்டுக் களியை எடுத்துப் பூசுவது சிறந்ததாகும்.

பனையின் பயன்களுள் இப் பனங்களி ஓர் சிறு உதாரணமே. எத்தனையோ பயன்களைத் தரும் பனை இன்று எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை அதன் அழிவே. கட்டடங்களின் கூரைமரத்தேவைக்காக வெட்டப்படும் பனையைஈடு செய்வதற்கு நாட்டப்படாமை அழிவுக்கு ஒரு காரணம். இவற்றையெல்லாம் விட பனையின் நுங்கு, ஓலை, குருத்து, முதலியவையும் பனங்கிழங்கும் நம்மவர்கள் பயன்படுத்த மறந்தமையே முதற்காரணமெனக் கூறலாம். இவற்றின் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ளும் வரை பனை எனும் கற்பகதருவின் அழிவு தடுத்து நிறுத்தப்பட முடியாது.

**பனையின் மருத்துவப்பயன்கள்**

எமது உள்நாட்டுக்குரிய வளங்களில்மிகமுக்கிய இடம்பெறுவதுபனை வளமாகும். பனையானது எமது கலாசாரம், பண்பாடு எமது அன் றாட வாழ்வில் பல முக்கிய இடங்க ளைப் பிடிக்கின்றது. இதனாலேயே இவற்றின் பயன்களைக் கொண்டு தமிழ் மூத்தோர்கள் கற்பகதரு என்று அழைத்தார்கள். பனையின் பயன்களை எடுத்து கூறவேண்டுமெனின் அதன் இலையிலிருந்து (ஓலை) வேர் வரை அதன் பயன்பாடு காணப் படுகிறது. இவற்றில் மருத்து வத் தன்மை வாய்ந்த பயன்கள் மிக முக்கியமானவை.

**1.பனை ஓலை**

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இதனை தொன்று தொட்டு பயன்படுத்துகிறார்கள்.

**ஓலை**

✦ குளிர்ச்சிபொருந்தியது. இதனை பயன்படுத்தி வாழிடங்கள் அமைத்தார் கள். சித்த மருத்துவத்தில் ஓலையை கொண்டு வேயப்பட்ட குடிசைகளில் மருத்துவத்தை மேற்கொண்டார்கள்.

✦ பனை ஓலையிலேயே எமது முன்னோர்கள் தமது அரிய பல கருத்துக்களை குறித்தார்கள்.

உதாரணம்:- மருத்துவக் குறிப்புக்கள், ஜாதகம், தீர்க்க தரிசனங்கள்

✦ இப்போதும் கூட இவற்றிலுள்ள தகவல்களை சரிவர தெரிந்து கொள்ள ஆராய்ச்சிகள் நடைபெறுகிறது

✦ பழங்களை பாதுகாக்க பச்சை பனை ஓலைகள் பயன்படுகிறது.

**2.பனங்குருத்து:-**

✦ இதனை மூத்தோர்கள் இளம் பனங்குருத்து எனக் கூறுவர்.

✦ இது மிகச் சத்துக்கொண்டது. எனவே அதிகமாக பயன்படுத்துவதில்லை.

**3.காய்ந்த பனை ஓலை**

✦ இதனைக் கொண்டு பெட்டிகள் பொருட்களை பேணிப்பாதுகாப்பதற்குரிய உபகரணங்கள் செய்யப்படுகின்றது.

✦ பனை ஓலையால் இழைக்கப்பட்ட பாய் எமது கலாசாரத்திலும் ஆரோக்கியத்திலும் முக்கிய இடம் பிடிக்கின்றது.

✦ இப்பாயில் படுத்து உறங்கின் வெப்பினால் ஏற்பட்ட உடல் உபாதைகள் குணமாவதுடன் ஆரோக்கியமும் ஏற்படும்.

✦ யாழ்ப்பாணகலாசாரத்தைபொறுத்தவரையில் அம்மை நோய் ஏற்படும் போது பனை ஓலைப் பாயின் மேல் வேப்பிலை பரவி உறங்க விடுவது வழக்கம்.

✦ தற்போதுநவீனஉலகைநோக்கி நாம் போய்க்கொண்டிருந்தாலும் மின்விசிறிப் பாவனையற்ற காலத்திலும் வெப்பகாலத்திலும் பனை ஓலை விசிறியையே பயன்படுத்தினார்கள்.

தற்போதும் கூட சமயப்பெரியோர்கள் இதனையே உபயோகிக்கிறார்கள் இதன்மூலம் இதமான குளிர்ச்சியான காற்றைப் பெறமுடியும்.

**4.பனையிலிருந்து பெறப் படும் பதநீர்:**

✦ பனம் பதநீர் எவ்வாறான முக்கிய இடம்பெறுகிறது எனின் அது.

1.குளிர்ச்சியான பானம்

2.கலப்படம் அற்றது

3.நொதித்தலிற்கு உட்படாத நிலை

எனவே இதை அருந்தின் உடல் வன்மை பெறும்.

✦ உயிர்ச்சத்து B இரும்புச் சத்து என்பன உண்டு.எனவே இது சின்னமுத்து, கொப்பளிப்பான் போன்ற நோயியலில் ஏற்படும் வாயவியலுக்கு உடன் இறக்கிய பணங்கள்ளு சிறிதளவு காலையில் மட்டும் பருகக் கொடுக்கும் வழக்கம் உண்டு.

✦ குளிர்ச்சியானது போசாக்கு மிக்கது.

மண்டிக்கள்- ஆறாத புண்களை ஆற்ற பயன்படும்.

**05. பனம் நுங்கு:-**

✦ சித்திரை, வைகாசி மாதங்களில் கிடைக்கும்.

✦ குளிர்ச்சியை தரும், பித்தத்தை சமனிலைப்படுத்தும்.

✦ உயிர்ச்சத்து A, C, Ca,P (பொஸ்பரஸ்) என்பன இதில் உண்டு.

✦ மலமிளக்கி செய்கை இதற்கு உண்டு.

✦ நுங்கு நீரை- வேர்ப்பருக்களுக்கு பூசுவது வழக்கம்.

**06 பனம் பழமும் அதன் உணவுகளும்**

✦ இதன் களியை யாழ்ப்பாண மக்கள் உணவு தயாரிக்க பயன்படுத்துகிறார்கள்.

உதாரணம்-

பனாட்டு, பனம் பணியாரம், பனம்களி-பழப்பாகு, பனம்களி கேக்

✦ இதில் உடலுக்கு தேவை யான் விற்றமின் A, C, Ca,P (பொஸ்பரஸ்) ஆகியன உண்டு.

✦ நார் சத்துக்கள், போசனை சத்துக்கள் உண்டு.

**07 பனங்கிழங்கு:-**

இது யாழ்ப்பாண மக்களி டையே பிரபல்யமான உணவு

✦ இதனைப் பயன்படுத்தி

1.அவித்த பனங்கிழங்கு

2.புழுக்கொடியல் செய்யப்படுகின்றன.இது ஆரோக்கியத்தை கொடுக்கிறது. இதனை வெளிநாட்ட வர்கள் விரும்பி வாங்கி செல்கின்றார்கள்.

**அவித்த பனங்கிழங்கு-**

ருசியான கிழங்கு, நாற்சத்து நிறைந்தது, ஊட்டம் நிறைந்தது, மலத்தை இளக்கும்.

**புழுக்கொடியல்-**

புட்டுடன் சேர்த்து இதன் மாவைப் பயன்படுத்துகிறார்கள். பனங்கட்டியும் சத்துமிக்க ஓர் உணவாகும். குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்களுக்கு வேண்டிய பல சத்துக்கள் இதில் அடங்கி யுள்ளன. குழந்தைகளுக்கான கஞ்சி வகைகள், எள்ளுப் பாகு, ஆடிக்கூழ் போன்றவற்றில் பனங் கட்டி சேர்க்கப்படுகிறது. இரும்புச் சத்தும் அதிகமாக இருப்பதோடு மலத்தையும் இளக்கும் தன்மையுண்டு.

பனை ஓலை விசிறியினால் வாத நோய்களும் கப நோய்களும் நீங்கும். நெய்தல் நில பனையினது இளங்காயெிலுள்ள நுங்கின் நீரானது வியர்க்குருவை நீக்கும். பசியைத் தரும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் மாநிலங்கள் தலையீடு செய்யவோ, அழுத்தங்களைக் கொடுக்கவோ முடியாது என்ற, பா.ஜ.க அரசாங்கத்தின் அழுங்குப் பிடியை ஆரம்பத்திலேயே ஆட்டம் காண வைத்துவிட்டது தமிழ்நாடு. தமிழ் நாட்டின் இந்த வெற்றிக்குக் காரணம்,

வளைக்க முடியவில்லை.

என்றாலும் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை ஆதரிக்கச் செய்வதில் தமிழ்நாடு பெரும் வெற்றியைப் பெற்றது. என்றாலும் 2013 ஆம் ஆண்டு வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலை வகித்தது.

அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து

அதுமட்டுமன்றி பாலஸ்தீனம் மீதான தாக்குதலில் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதா என்று இஸ்ரேல் மீதான சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தைக்கூட அண்மையில் இந்தியா ஆதரித்து வாக்களித்துள்ளது.

2012, 2013 இல் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கை தடுமாறியதெனில், 2014 இல் இஸ்ரேல்

வருகின்றன.

இந்த இரண்டு தரப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு இரு நாடுகளுடனும் உறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது பா.ஜ.க. கொள்கை வகுப்பாளர்களினது கருத்தாகும்.

அண்மையில் கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த ஞாபகார்த்த கருத்தரங்கில் உரையாற்றிய, பா.ஜ.கவின் தற்போதைய

டில் கொந்தளிப்பை ஏற்படுத்திய போது அதனை வேடிக்கை பார்த்த இந்திய அரசாங்கத்தினால் அந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையாக வெடித்தபோது மௌனமாக இருக்க முடியவில்லை.

அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்காக தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டது பா.ஜ.க அரசாங்கம்.

# மத்திய அரசின் அழுங்குப் பிடி, ஆட்டங்காண வைத்த தமிழ்நாடு



இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு என்பது, ஒரு விசித்திரமான உண்மைதான்.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுக்கும் எந்தளவுக்கு எட்டாப் பொருத்தம் என்பதை இங்கு விபரித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இலங்கை அரசாங்கத்தை தமிழ்நாடும், தமிழ்நாட்டை இலங்கை அரசும் எந்தளவுக்கு மோசமாக விமர்சிக்க முடியுமோ அந்தளவுக்கு மோசமாக விமர்சித்து வந்த வரலாற்றை எவராலும் இலகுவில் மறக்க முடியாது.

இங்குள்ள தமிழர்களுக்காக தமிழ்நாட்டிலிருந்து கொடுக்கப்படும் குரலை இலங்கை அரசாங்கத்தினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதுபோலவே இலங்கையில் தமிழர்கள் நடத்தப்படும் விதத்தை தமிழ்நாட்டினால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

இதுவே இரு தரப்புக்குமிடையிடான விரிசலின் அடிப்படை. இந்த விரிசலின் விளைவும் இலங்கைத் தமிழர் மீதான, தமிழ் நாட்டின் கரிசனைகளும் புதுடில்லி மீதும் தாக்கத்தைச் செலுத்தியது.

குறிப்பாக மன்மோகன் சிங் அரசாங்கத்தில் தி.மு.க அங்கம் வகித்தபோதும் சரி, அதிலிருந்து வெளியேறிய பின்னர் ஏற்பட்ட சூழலிலும் சரி, அதிலிருந்து வெளியேறிய பின்னர் ஏற்பட்ட சூழலிலும் சரி, தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு புதுடில்லி வளைந்து கொடுக்கும் நிலை காணப்பட்டது உண்மை. எல்லாச் சந்ர்ப்பங்களிலும் அவ்வாறு புதுடில்லி வளைந்து கொடுத்ததாகக்கூற முடியாது.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு போரை நிறுத்தும் விடயத்தில் புதுடில்லி மீது கொடுக்கப்பட்ட தி.மு.கவின் அழுத்தங்கள் பயனளிக்கவில்லை.

அதுபோல இலங்கையுடனான இராணுவ உறவுகளை முறித்துக்கொள்ளவும் பயிற்சிகளை நிறுத்திக்கொள்ளவும் தமிழ்நாட்டின் அழுத்தங்கள் அவ்வளவாக கண்டுகொள்ளப்படவில்லை. போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சிகளிலும் புதுடில்லியை தமிழ்நாட்டினால்

முறையான அழுத்தங்கள் கொடுக்கப்படாததும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக்கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் இந்தியா ஆதரித்தபோது புதுடில்லியின் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலும் இந்தியாவின் தேசியவாதிகள் மத்தியிலும் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது.

காரணம், இது தவறான முடிவு என்றும், தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு அப்போதைய அரசு அதிகம் வளைந்து கொடுப்பதாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

எந்தவொரு நாட்டையும் இலக்கு வைத்து கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஆதரிப்பதில்லை என்பதே இந்திய வெளிவிவகாரக் கொள்ளை என்றும் அதனை புதுடெல்லி மீறிவிட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

2013 ஆம் ஆண்டு தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது புதுடெல்லி மீது தமிழ்நாட்டின் அழுத்தங்கள் அதிகமாக இருக்கவில்லையென்பதுடன் தமிழ்நாட்டுடன் பேரம் பேச வேண்டிய அவசியமும் மன்மோகன் சிங் அரசுக்கு இல்லாமல் போனது.

அரசியல் சூழலில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் ஜெனிவாவில் இந்தியா தனது முடிவை எடுப்பதில் எந்த தாக்கத்தையும் செலுத்தவில்லை. இதனால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காமல் தவிர்த்தது இந்தியா.

அதேவேளை சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மான வாசகம் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அதற்கு எதிராகவும் இந்தியா வாக்களித்தது. எந்தவொரு நாட்டையும் குறிவைத்துக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்பது இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கை என்று அதனை நியாயப்படுத்தியது புதுடெல்லி.

ஆனால், அதே இந்திய வெளிவிவகார அமைச்சுதான், 2012, 2013 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்திருந்தது.

விவகாரத்திலும் இவ்வாறே தடுமாறியது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எவ்வாறாயினும் இலங்கை விவகாரத்தில் புதுடெல்லியின் முடிவுகள் மீது தமிழ்நாடு செல்வாக்குச் செலுத்தும் நிலைக்கு கடந்த மே மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு கட்டியிருந்தது.

அந்த தேர்தலில் பா.ஜ.க பெற்ற தனிப்பெரும்பான்மை பலம், மாநிலங்களின் கருத்துக்களுக்கு செவி கொடுக்க வேண்டிய அவசியத்தை இல்லாமல் செய்துவிட்டது. மாநிலங்களின் தயவின்றி ஆட்சி செய்யும் ஓர் அரசாங்கம், தன்னிச்சையாகவே முடிவுகளை எடுக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் தமிழ்நாடோ, மேற்கு வங்காளமோ, தலையிட முடியாது என்று பா.ஜ.க. தரப்பினர் வெளிப்படையாகவே கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும் மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க. தலைவர்கள் யாரும், அதனை வெளிப்படையாகக் கூறியதாகத் தெரியவில்லை.

ஆனால், அவர்களை ஆட்டுவிக்கும் அல்லது ஆட்டுவிக்க முற்படும் பா.ஜ.க. கொள்கை வகுப்பாளர்கள், அந்தக் கருத்தை வலியுறுத்தி வருகின்றனர். இலங்கை விவகாரத்தில் தமிழ்நாடும் பங்களாதேஷ் விவகாரத்தில் மேற்கு வங்காளமும்தான், புதுடெல்லி மீது அழுத்தங்களைக் கொடுத்து

தலைவர்களில்ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி இந்திய, இலங்கை உறவுகளிலிருந்து தமிழ்நாட்டையும் தமிழர் பிரச்சினையையும் துண்டிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

இது பா.ஜ.க தரப்பிலுள்ளவர்களின் மனோ நிலையை தெளிவாகவே படம் பிடித்துக் காட்டியது.

இனிமேல், அதாவது நரேந்திர மோடி அரசாங்கம் பதவியில் இருக்கும். அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாநிலங்களின் தலையீடு இருக்கிறது என்றே கருதப்பட்டது.

அவ்வாறு தலையிடுவதற்கு அல்லது செல்வாக்குச் செலுத்துவதற்கு புதுடெல்லி இடமளிக்காது என்பதற்கான சமிக்ஞைகளே வெளிப்பட்டன.

எனினும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஒரு நடவடிக்கை, தமிழ்நாட்டின் கரிசனைகளுக்கும் கவலைகளுக்கும் காது கொடுக்க வேண்டிய நிலையை புதுடெல்லிக்கு ஏற்படுத்திவிட்டது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியான கட்டுரை தனியே, இலங்கை மீது அழுத்தங்களைக்கொண்டு வரவில்லை.

புதுடெல்லிக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தி அதனைத் திக்குமுக்காடச்செய்துவிட்டது.

கட்டுரை விவகாரம் தமிழ்நாட்

தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்குப் பணிந்து அதன் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகியது. பாதுகாப்பு அமைச்சு மன்னிப்புக் கோரிவிட்டது. அதனுடன் எல்லாம் முடிந்து போயிற்று என்று கூறி இந்த விவகாரத்தில் அடிபணியாமல் இருந்திருக்க முடியும். ஆனால், பா.ஜ.க அரசாங்கத்தினால் அவ்வாறிருக்க முடிய வில்லை.

தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று புதுடெல்லிக்கான இந்தியத் தூதுவரை அழைத்துக் கண்டித்துள்ளது. இதுவெளிவிவகாரக் கொள்கையில் தலையிடும் உரிமை மாநிலங்களுக்கு இல்லை என்ற பா:ஜ.க அரசின் நிலைப்பாட்டுக்கு முரணானது.

இந்த முடிவை எடுத்ததன் மூலம் உணர்வுப்பூர்வமான பிரச்சினைகளில் மாநிலங்களின் கருத்துக்கு மத்திய அரசு செவி சாய்த்தேயாக வேண்டும் என்று உணர வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இனிமேல் இந்திய- இலங்கை உறவுகளுக்குக் குறுக்கே தமிழ்நாட்டினால் எதையும் செய்ய முடியாது என்ற இலங்கை அரசாங்கத்தின் நினைப்பிலும் இது மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் முதலமைச்சரை சந்திக்க ஆர்வமாகவுள்ளேன்

## இலங்கைத் தூதுவர் செனவிரட்ன


தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் அழைப்பை ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் சுதர்ஷன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழக முதலமைச்சர், இலங்கை அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

கடந்த 31 ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகராக பதவியேற்றுக் கொண்ட செனவிரட்ன, இந்திய ஊடகம் முதல் முறையாக பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.

ஆராய்ச்சியில் ஈடுபட்ட காலத்தில் அவர் தமிழகத்திற்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தனது ஆசிரியர்கள், சகாக்கள் உட்பட தமிழ் நாட்டு மக்களை என்னால் மறக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எமக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் ஒரு உணர்வுபூர்வமான பிணைப்பு இருந்தது.





தனது புதிய பணி கடந்த கால பல்கலைக்கழக நட்புகளை மீண்டும் எண்ண தூண்டியுள்ளதாகவும் மீண்டும் தனது வீட்டுக்கு வந்த உணர்வை ஏற்படுத்தியிருப்பதாகவும் செனவிரட்ன தெரிவித்தார்.

கல்வி, புத்தகங்கள், பண்டைய நனைவுச் சின்னங்களுடன் வாழ்வை செனவிரட்ன கழித்து வந்தார். இந்நிலையில் இலங்கையின் மிகப் பெரிய அண்டை நாடான இந்தியாவுடன் அடிக்கடி ஏற்பட்டு வரும் பாதிப்புகளை சரி செய்யும் நோக்கத்தில் கொழும்பு அரசாங்கம் அவரை இந்தியாவுக்கான தூதுவராக நியமித்திருக்கலாம் என இந்திய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டு போரில் நடந்த அத்துமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா எதிர்த்து வாக்களித்த நிலையில், செனவிரட்ன இந்தியாவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# மலேசியாவில் புலிகளுக்கு அரசியலில் புகலிடம்!

மலேசியாவில் தமிழீழ விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இவ்வாறு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

மலேசியாவில் உள்ள 4 ஆயிரத்து 375 தமிழீழ விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசியல் புகலிடம் வழங்கப்படுவதற்கு முன்னதாக அது குறித்து இலங்கை அரசாங்கத்திடம் எது பற்றியும் கேட்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச பொலிஸாரினால் சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் மேலும் சிலர் போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள்.

இலங்கையர்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்திடம் இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்பிய போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (6)

## விஹாரைகள் தாக்கப்பட்டால் நிலைமை என்னவாகும்?-தேரர்

இலங்கையில் காவி உடை தரித்தவர்கள் பௌத்த மதத்தின் கோட்பாடுகளுடன் கௌரவமாக நடந்து கொள்ளாததே அளுத்கம மற்றும் பேருவளை அசம்பாவிதங்கள் நடைபெற காரணமாகும் என அம்பாறை மத்திய முகாம் பீடாதிபதி சீரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டது போல் பௌத்த விஹாரைகள் இரண்டு தாக்கப்பட்டால் இந் நாட்டின் நிலைமை என்னவாகும்? எனவே பௌத்த பிக்குகள் தங்களின் மத கோட்பாடுகளுடன், எந்த மதத்தையும் விமர்சனம் செய்யாது வீதியில் இறங்கி அரசியலில் பங்கு பற்றாமல் இருப்பதே மேல். இலங்கை அனைவருக்கும் சொந்தமான நாடு எனவே நாம் இன, மத பேதம் பார்த்து செயற்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (6)

## வெங்காயத்துக்கான தீர்வை அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்துக்கான விசேட வியாபார பண்ட இறக்குமதி தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

உருளைக் கிழங்குக்கான தீர்வை, கிலோ ஒன்றுக்கு 15 ரூபாவினாலும் பெரியவெங்காயத்துக்கான தீர்வை, கிலோ ஒன்றுக்கு 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. (6)

# யாழ்தேவியை மாத்தறையிலிருந்து ஆரம்பிக்குமாறு ஜனாதிபதிக்கு மனு

(கொழும்பு)

யாழ்தேவி ரயில் சேவையை மாத்தறையிலிருந்து ஆரம்பிக்குமாறு கரையோர ரயில் பயணிகளின் சங்கம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில், அந்த சங்கத்தின் தலைவர் குணபால வித்தாரண, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட காலத்திற்கு பின்னர் யாழ்ப்பாணம் வரை பய[illegible] ஆரம்பிக்கவிருக்கின்ற யாழ்தேவி ரயில் சேவையின் பயணமானது கொழும்பு கோட்டையிலிருந்து ஆரம்பிப்பதால், வடக்குக்கும் தெற்கிற்கும் இடையில் உண்மையான உறவுப்பாலம் ஏற்படாது.

யாழ்தேவி ரயில் சேவை, தெய்வேந்திர முனைக்கு அண்மையிலுள்ள மாத்தறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டால் தென்னிலங்கை மக்களுடன் நல்லுறவை தொடரலாம் மற்றும் கதிர்காமத்திற்கு வருகின்ற யாத்திரிகர்கள் யாழ்ப்பாண மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவர் என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

# இன்று ஒரு தகவல்

## மண்பானை மகத்துவம்

"எங்க அம்மா ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார்! அதை எடுத்துக் கொண்டுபோய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் அதை ஒரு பொன்குடமாக மாற்றிவிட்டார்!" என்றார் ஒருவர்.

"எப்படி அது?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை! கீழே போட்டு உடைத்துவிட்டார்!" என்றார்.

"அப்படியானால், அது எப்படி பொன்குடமாக மாறும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது. அதுதான் பொன் குடம்!" விளக்கம் சொன்னார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம்-பெண்குடம் மாதிரித்தான். மண்பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு இப்பொழுது பலபேர் "வோட்டர் பில்டர்" உபயோகப்படுத்துகிறார்கள். அதே மாதிரி தண்ணீரைக் குளிர்ச்சியாக வைக்க பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த இரு செயல்களையும் செலவே இல்லாமல் செய்து கொடுப்பது தான் மண்பானை! உலோகப் பாத்திரங்களில் நீர் ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் மண்பானையில் நீர் ஊற்றி வைத்தால் அப்படி ஆவதில்லை. நீரிலுள்ள கிருமிகளையெல்லாம் உறிஞ்சி விடுவதால் குடிநீர் சுத்தமாகி விடுகிறது.

அந்தக் காலத்திலேயே நமது முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். மண்பானை என்பது ஒரு தலைசிறந்த "வோட்டர் பில்டர்" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத்தில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்கு பின்பும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே!

முதலில் பானையை எடுத்துக் தட்டிப்பாருங்கள்! வெண்கலப் பாத்திரத்தை தட்டுவது மாதிரி சத்தம் கேட்டால் அது நல்லபானை.

பானைக்கு வெளிப்பக்கம் கறுப்புத் திட்டாக தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம். வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து, சொரசொரப்பாக இருக்கும். அது வேண்டாம் வெளிப்பாகத்தில் இருப்பதை போன்று உள்பக்கமும் கறுப்புத் திட்டு இருந்தால் அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளில் உடைந்து விடும்.

புதுப்பானையில் தண்ணீரை ஊற்றியவுடன் "உஸ்" என்ற சத்தம் கேட்கும் பானையில் களிமண்ணுடன் கலந்திருக்கும் மணல் நீரை உறிஞ்சும் சத்தம் தான் அது. பானைக்கு வெளிப்பக்கமோ, உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கி விடும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

என்னதான் இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் மண்பானைத் தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையாக தாகத்தை தணிப்பது அதுதான்!

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிப்பார். ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முதல் மனைவியைக் கூப்பிட்டு "உன்கையால் 'ஜில்' என்று தண்ணி கொண்டு வந்துகொடு குடித்து விட்டுப் போகிறேன்" என்றார்.

அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் குடித்தார். வெயிலுக்கு இதமாக இருந்தது.

"ஆகா! மண் பானைத் தண்ணியா? கால மறிந்து நடப்பதில் உன்னை எவரும் மிஞ்ச முடியாது! ரொம்ப தாங்ஸ்" என்றார்.

"உங்களுக்குத்தான் தாங்ஸ் சொல்ல வேண்டும்" என்றார் அந்த அம்மா.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"நேற்று, இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம் வீட்டில் மண் பானையாக உபயோகப்படுத்துவதே உங்கள் 'கடம்'தான்! ரொம்ப தாங்ஸ்" என்றாராம் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கடும் வரட்சி; கால்நடைகள் நீரின்றி தவிப்பு

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் கால்நடைகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டம் கால்நடை மற்றும் விவசாயத்திற்கு சிறந்த இடமாக விளங்கும் நிலையில் அண்மைக்கால வறட்சி இவ்வாறான நிலைக்கு கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. குளங்கள் மற்றும் கிணறுகளில் நீர் வற்றியதால் கால்நடைகளுக்கு போதுமான நீர் கிடைக்காமல் போயுள்ளது.




அத்துடன் கடும் வரட்சி காரணமாக புற்றரைகளும் காய்ந்து கருகி போயுள்ளதால் கால்நடைகளுக்கு உணவுப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அதிகளவான வெப்பத் தாக்கத்தினால் கால்நடைகளுக்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதாக தெரிவிக்கும் கால்நடை வளர்ப்பாளர்கள் தாம் கால்நடை மூலம் பெற்றுவந்த பொருளாதாரம் பாதிப்படைந்து இதனால் தமது அன்றாட ஜீவனோபாயமும் பாதிப்படைந்துள்ள தாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா நெளுக்கும் பகுதியில் குளத்தின் நீரேந்து பகுதியில் முற்றுமுழுதாக நீர் வற்றிய நிலையில் மீதமாக இருக்கும் நீரையே குறித்த பகுதியில் உள்ள கால்நடைகள் தாகத்தை தணிப்பதற்கு பயன்படுத்தி வந்தன.

இந்நிலையில் குளத்தின் கீழ்ப்பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகள் தமது நெற்பயிர்களை காப்பாற்றுவதற்காக குளத்தில் கால்நடைகள் அருந்துவதற்கு மீதமாக இருக்கும் தண்ணீரையும் உழவு இயந்திரத்தின்மூலம் வயல் நிலங்களுக்கு நீர்பாய்ச்சுகின்றனர்.

இதனால் குளத்தில் உள்ள மீன்கள இறந்து போவதுடன் குறித்த குளத்தை நம்பியிருக்கும் கால்நடைகளும் இறந்து போகும் தருவாயில் காணப்படுகிறது.

இந்நிலையில் தமக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

# புகையிரதத்திலிருந்து இறங்க முற்பட்ட நபர் விழுந்து மரணம்

வவுனியாவில் புகையிரதத்திலிருந்து இறங்க முற்பட்டவர் கீழே விழுந்து மரணமடைந்தார்.

வவுனியா புகையிரத நிலையத்தில் நண்பர் ஒருவரை வழியனுப்பி விட்டு புகையிரதத்திலிருந்து இறங்க முற்பட்ட நபர் கீழே விழுந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

கடந்த 10 ஆம் திகதி இரவு வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து இரவு 10மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும் புகையிரதத்தில் நண்பர் ஒருவரை வழியனுப்புவதற்காக புகையிரத நிலையத்திற்கு வந்து புகையிரதத்திற்குள் இருந்து நண்பருடன் உரையாடி விட்டு புகையிரதம் செல்வதற்கு ஆயத்தமாகிய நிலையில் மேற்படி நபர் வாயில பக்கமாக கீழே இறங்க முற்பட்ட போது தவறி கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்த நபர் புகையிரதத்திற்குள் அகப்பட்டு காயமடைந்துள்ளார். இதனையடுத்து உடனடியாக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் மரணமடைந்தவர் கரப்பன்காடு, வவுனியாவை சேர்ந்த முனியாண்டி ஜெயபிரகாசம் (வயது 65) என்பவராவார்.

இவரின் மரணம் தொடர்பாக வவுனியா நகர திடீர்மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் மரண விசாரணையை மேற்கொண்ட பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-15-250)

# பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கான இறுதி நடமாடும் சேவையொன்று இடம் பெறவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த இறுதி நடமாடும் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடமாடும் சேவையினூடாக பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் காலங்கடந்த பதிவுகள் மேற்கொள்ளல், முதியோர் அடையாள அட்டை, இலவச ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை, இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கல் மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் புதிய தொலைந்த மற்றும் திருத்தத்துக்கான தேசிய அடையாள அட்டைக்கான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந் நடமாடும் சேவையில் புகைப்படம் எடுத்தல், முத்திரைகள், பொலிஸ் அறிக்கை போன்றவற்றை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சேவையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் பங்கு கொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# கிணறு அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

(குருமன்காடு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி சூழ்நிலை காரணமாக குளங்களிலுள்ள நீர் வற்றத் தொடங்கியதையடுத்து விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமையால் அவை பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

இந்நிலையில் குறிப்பாக வவுனியா பகுதிகளிலுள்ள குளங்களில் நீர் இன்மையினால் பல விவசாய நிலங்கள் அழிவடைந்து வருகின்றன.



இந்நிலையில் 25 ஏக்கர் கொண்ட வவுனியா கல்நாட்டினங்குளம் பகுதியில் அமைந்துள்ள துரவிக்குளம் பகுதியிலுள்ள விவசாய நிலத்திற்கான குளம் வற்றியதை தொடர்ந்து விவசாய நிலங்கள்நீர்இன்றிகாணப்படுகின்றன.

இதனையடுத்து இவ்விடத்தை மேற்படி விவசாயிகள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து மேற்படி விவசாய நிலத்திற்கு நீர் கிடைக்கும் வகையில் உடனடியாக கிணறு ஒன்றை அமைப்பதற்கான ஒழுங்கு செய்யுமாறு தனது செயலாளருக்கு பணித்துள்ளார். இந் நிலையில்கிணறு அமைப்ப தற்கான வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கிணறு அமைப்பதற்கு அமைச் சரின் ஒதுக்கீட்டு நிதியில் இருந்து 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# இலவச மருத்துவ முகாம்





முல்லை.விசுவமடு பிரதேசத்தில் இளங்கோபுரம், பாரதிபுரம், மாணிக்கபுரம் ஆகிய கிராம மக்களுக்கு கடந்த 10 ஆம் திகதி இலவச மருத்துவ முகாம் இடம்பெற்ற போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## முத்தமிழ் சங்கமம்

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணிக்கு வவுனியா சிந்தா மணி பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் பேரவையின் தலைவர் சைவ சித்தாந்த முதுமாணி சிவ.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை நிலைய தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், பிரதம விருந்தினராக பேராதனை பல்கலைக் கழக தமிழ் துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ் துறை தலைவர் கி.விசாகரூபன்,விசேட விருந்தினராக சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகர் சி.கணேஷ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, செட்டிக்குள பிரதேச செயலாளர் என்.கமலதாசன், நெடுங்கேணி பிரதேச செயலாளர் கா.பரந்தாமன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

இந் நிகழ்வின் ஆசியுரையினை சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் பிரதம குரு கலாநிதி நா.சர்வேஸ்வர குருக்களும் வவுனியா கருமாரியம்மன் பிரதமகுரு நா.பிரபாகர குருக்களும் வழங்கவுள்ளனர். இந்நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (2-250)

# காணி உறுதி மற்றும் வரைபட ஆவண பயனாளிகளுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஆனந்தபுரம் கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த இந்தியன் வீட்டுத்திட்ட பயனாளிகளில் காணி உறுதிப்பத்திரம் அல்லது வரைபடம் போன்ற ஆவணங்கள் உள்ளவர்களுக்கு மட்டுமே குறித்த வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என கரைச்சிப் பிரதேச செயலக காணிப்பகுதி உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆனந்தபுரம் கிழக்கு கலைவாணி முன்பள்ளியில் அண்மையில் இந்தியன் வீட்டுத்திட்டப்பயனாளிகளுக்கு நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி கூறப்பட்டதாக பாதிக்கப்பட்ட பயனாளிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த பல சந்தர்ப்பங்களில் காணி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கும் அவை கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வீட்டுத்திட்டங்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டு வந்த நிலையில் இப்போது மேற்படி கூறப்பட்டதாக தெரிகிறது.

இதன்பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கான ஒதுக்கீடுகள் இனங்காணப்பட்டு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அதிகாரிகள் கூறினார்கள்.

இதற்கமைய வீட்டுத்திட்டத்திற்கான படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் திறக்கப்பட்டு வீட்டுத்திட்டத்தை எதிர்பார்த்திருந்த நிலையில் இன்று எதிர்மாறான கருத்துக்கள் உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வீட்டுத்திட்டத்தை எதிர்பார்த்திருந்த பயனாளிகளுக்கு குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் தமது குறைகளையாரிடம்முறையிடுவதுஎன தெரியாது குறித்த மக்கள் அல்லற்படுவதாக கூறப்படுகிறது. (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாவது உலக பெண்கள் மாநாட்டில் (2015) ஒலிக்கப் போகும் பெண்கள் குரல்கள் கேட்கப்படுமா?

சரோஜா சிவச்சந்திரன்

பெஜ்ஜிங் நகரில் கடந்த 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டைத் தொடர்ந்து, 20 வருடங்களின் பின் 2015 இல் ஐக்கிய நாடுகள் சபையானது ஐந்தாவது உலகப பெண்கள் மாநாட்டை நடத்துவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

2011ஆம் ஆண்டில் ஐ. நாவில் ஐ.நா பெண்கள் அமைப்பு (UN Women) உருவாக்கப்பட்டதனைத் தொடர்ந்து உலக நிகழ்ச்சித் திட்டத்தில் பெண்களை மிக முக்கியத்துவப்படுத்தும் மாநாடாக இம் மாநாடு அமையவுள்ளது.

உலகின் குடித்தொகையில் அரைப்பங்கிற்கு மேல் பெண்கள் இடம்பெற்றிருப்பது, உலகளாவிய முன்னேற்றத்தில் அவர்களது முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது. இன்று உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவது, பெண்களுக்கும் அவர்கள் முனனேற்றத்திற்கும் சாதகமான நிலமைகளை உருவாக்கியுள்ளன. இக்காலகட்டத்தில் நடைபெறவுள்ள இம்மாநாடு இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஐந்தாவது (5WCW) உலக பெண்கள் மாநாட்டில் நான்காவது பெஜ்ஜிங் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட 12 அம்சங்களடங்கிய செயற்திட்ட வரைவு, ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகள் மத்தியில் எவ்வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டன, அதனை நடைமுறைப்படுத்துவதில் நாடுகள் எதிர்நோக்கிய சவால்கள் என்பன ஆராயப்படவுள்ளன. இவை மட்டுமன்றி எதிர்காலத்தில் பெண்கள எதிர்நோக்கும் பிரச்சி னைகள் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம், 1325 இனை நடைமுறைப்படுத்தல், பெண்கள் பாதுகாப்பு, சமஉரிமை மேலும் உணவுப் பாதுகாப்பு, கடத்தல், போதைப்பொருட் பாவனை, கிராமியப் பெண்களின் வகிபங்கு என்பன ஆய்வில் முக்கிய இடம் பெறவுள்ளன. இம்மாநாட்டில் இளம் பெண்களின் கூடிய பங்களிப்பிற்கு முக்கியம் கொடுக்கப்படவுள்ளமை புதியதோர் பரிமாணத்தைக் காட்டுவதாக உள்ளது.

2015 ஆம் ஆண்டு அபிவிருத்தி தொடர்பான ஆண்டின் ஓர் மைற்கல்லாகும். இரண்டாயிரமாம் ஆண்டின் (MDGS) அபிவிருத்தி இலக்குகளின் வரையறை தீர்மானிக்கப்பட்ட ஆண்டாகும். இவ்வாண்டிற்கான வரையறுக்கப்பட்ட இலக்குகள் அடையப் பெற்றனவா என்பதை மதிப்பீடு செய்து ஒவ்வொரு நாடுகளும் அறிக்கை சமர்ப்பிப்ப தற்குக் கொடுக்கப்படும் அரிய சந்தர்ப்பமாகும். கடந்த இருபது வருடத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்காக இலக்குகளை மையப்படுத்தி அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்கள் பெண்கள் வாழ்வில் அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளனவா என்பதைச் சமர்பிக்கப்படும் அறிக்கைகள் காட்டவுள்ளன.

தவறவிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு 2015 இன் பின் இடம் பெறவுள்ள நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகள் (SDG) என வரையறை செய்து, 2015 இற்கு அப்பாலும் அபிவிருத்தி இலக்குகளை நகர்த்துவதற்கு ஐ.நா ஆயத்தமாகவே உள்ளது.

இவ் இருபது வருட கால இடைவெளியில் இலங்கையில் பெண்களின அபிவிருத்திச் சுட்டியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?. ஆய்வுகளும், தரவுகளும் பெண்களின் கல்வி, அரசியல் பங்களிப்பு என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக காட்டுகின்றன. இதனால் பால்நிலை சமதுவம் எட்டப்பட்டதாகக் கருதமுடியாது. மகப்பேற்று சுகாதாரம், பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை, வறுமை என்பவை கோடிட்டுக் காட்டக்கூடிய சவால்களாகவே உள்ளன.


இலங்கையில் பெண்கள் முன்னேற்றம் என்பதற்கு அப்பால், பிரதேச வாரியான குறைபாடுகள் நிறையவே காணப்படுகின்றன. இலங்கையில் முப்பது வருடகாலப் போரின் பிடியில் சிக்கி, தமது வாழ்வாதாரங்களை இழந்த பெண்கள் அநாதரவாக இன்னும் பாரிய சுமைகளோடு வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

புதிய புதிய வன்முறைகளின் பாதிப்புக்களினால் பாதிக்கப்படும் இளம் பெண்கள், இலத்திரனியல் ஊடகங்களின் தாக்கங்கள் என்பன இன்று மேலதிக சவால்களாக உருவெடுத்துள்ளன. 2015 இல் இடம் பெறவுள்ள மாநாட்டில் நாம் சந்திக்கப்போகும் சவால்களில் ஒன்று இலங்கையில் பெண்கள் அபிவிருத்திச் சுட்டியின் வளர்ச்சி, மற்றும், பால்நிலை சமத்துவத்தில் உலகளாவிய குறிகாட்டியில் நாம் எங்கே நிற்கின்றோம் என்பதாகும்.

இலங்கையில் தரவுகளின் அடிப படையில் அபிவிருத்தி, கல்வி சுட்டிகளில் ஆண்களைவிட பெண்கள் முன்னிலையில் நிற்பதாக உள்ளது. அரசியலில் கூட பெண்கள் தம்மை முன்னிலைப்படுத்தும் செயற்பாடுகளும் மேலோங்கி உள்ளன. ஆயினும சமாதான முன்னெடுப்புக்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள் மேலோங்கியுள்ள அரசியல மயப்படுத்தலினால் பெண்களைப் புறம் தள்ளியே வைககப்பட்டுள்ளனர்.

அரசியலில் ஈடுபடும் பெண்களும் ஏதோ ஓர் வகையில் அர சியல் மயமாக்கப்பட்டுவிடும் போக்கும் காணப்படுகின்றது. அண்மையில் இஸ்ரேலிய பெண் பிரதிநிதி ஒருவர், பலஸ்தீனியத் தாய்மார்கள அனைவரையும் கொன்று குவியுங்கள் என்று ஆவேசமாகக் கூறிய அரசியல் வார்த்தைகள், உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய சோகம். துருக்கி நாட்டின் துணைப் பிரதமர், பெண்கள் பொது இடங்களில் சிரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

பாலியல் வல்லுறவு கொலைகளின் அக்கிரமம். இன்னும் குறைந்ததாக இல்லை. பெண்கள் அமைபபுக்களால் எத்தனை போராட்டங்கள, வன்முறைக்கு எதிராக எத்தனை சட்டங்கள், ஆனால் வனமுறைகள் குறைந்ததாகஇல்லை. 2014, ஜூலை மாதத்தில் களுத்துறையில் இரு மாணவிகள் கடத்தப்பட்டு ஐந்து பேரால் வல்லுறவு, இரக்குவானைத் தோட்டத்தில் இளம் பெண் பட்டப்பகலில் வல்லுறவு, ஆர்ப்பாட்டங்கள் எடுக்கப்பட்டால் தான் குற்றம் புரிந்தவர் வலை வீசி பிடிக்கப்படுவர் என்ற நிலை நாடுகள் ஒவ்வொன்றிலும். இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள், பேரதிர்ச்சியாக ஊடகங்களில் வெளிக்காட்டப்பட்ட போதிலும், பெண்களின் உத்வேகமான செயற்பாடுகளும், தீவிரமான ஈடுபாடும் இவற்றைக் குறைப்பதற்கு உதவ முடியும். இவ்வகையில் 2015 இல் இடம்பெற வுள்ள ஐந்தாவது உலகப் பெண்கள் மாநாடு, அங்கே சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கைகள் பெணகளின் பிரச்சினைகட்கு ஒருமித்த குரலாக ஒலிக்கும் என்பதற்கு கிடைக்கும் இனனோர் அரிய வாய்ப்பாகும்



புங்குடுதீவில் தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவி வரும் தற்போதைய நிலையில் அங்கு கால் நடைகள் இறக்கும் அபாயம் காணப்படுகின்றது. இந்நிலையில் வேலணைப் பிரதேச சபையினால் கால்நடைகளுக்கு நீர் வைக்கப்படுகின்றமையை படத்தில் காணலாம்.

# அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பு

## தேசிய செயலக செயலாளர் தெரிவிப்பு

நான்கு அரசசார்பற்ற அமைப்புகளின் செயற்பாடுகளை கண்காணித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

செயலகத்தின் செயலாளர் சமன் திஸநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

நான்கு அரசசார்பற்ற அமைப்புகள் குறித்து நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் விசாரணைகள் முடிவடைந்ததும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்போம் எனத் தெரிவித்துள்ள அவர் கடந்த காலங்களில் சில அரசசார்பற்ற அமைப்புகள் தடை செய்யப்பட்டதையும் நினைவு படுத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவன செயலகம் இவ்வாறு கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த திட்ட அறிக்கை ஆகியன வற்றை குறித்த நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங் களும் சமர்ப்பிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உரிய நோக்கங்களுக்கு புறம்பாக செயற்பட்டு வரும் நிறுவனங்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தன்னார்வ தொண்டு நிறுவன செயலகத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பொன்னம்பலம் கம்சானந்தி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கம்சானந்தி கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சோமசுந்தரம் தங்கம்மா



மணல் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தங்கம்மா காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### சின்னத்துரை பத்மராசா

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மராசா கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு புகையிரத நிலைய வீதி, கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி பாலகிருஸ்ணன் செல்வராணி



இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஸ்ணன் செல்வராணி கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு North East Surrey,Crematorium Cemetery Lodge/Lower Morden La Morden SM4 4NU,UK என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### பொன்னுத்துரை ஞானேந்திரன்

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஞானேந்திரன் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Paroisse Saint Vincent de Paul Rue,Auguste Blanqui 93420 Villepinte France என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடியின் ஆட்சி திருப்தியளிக்கிறது



நரேந்திர மோடி அரசின் செயறபாடுகள் திருப்திகரமாக உள்ளதாக பெரும்பாலானவர்கள் ஒன்லைனில் கருத்து தெரிவித்துள்ளனர்.

மத்தியில் பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் பா.ஜனதா அரசு கடந்த மே மாதம் பதவி ஏற்றது. பிரதமர் மோடி பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். பாராளுமன்றத்தில் மோடி அரசின் முதலாவது ரெயில்வே பட்ஜெட்டும், பொது பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த 3 மாதங்களில் மோடி அரசின் செயறபாடுகள் பற்றி பா.ஜனதாவின் பொது மக்கள் பிரசார கொள்கை நிபுணரும், பா.ஜனதா பிரமுகருமான ராஜேந்திர பிரதாப் குப்தா என்பவர் 'ஒன்லைன்' மூலம் கருத்து கணிப்பு நடத்தினார்.

தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்களில் பணியாற்றுவோர், முதலீட்டாளர்கள், விவசாயிகள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், கடடட ஒபபந்தகாரர்கள், கட்டுமான தொழிலாளர்கள், பயிற்சியாளர்கள், மூத்த குடிமக்கள் ஆகியோரிடம் கருத்து கணிப்பு நடத்தப்பட்டது.

பா.ஜனதாவின் தகவல் தொடர்பு பிரிவு ஒத்துழைப்புடன் மொத் தம் ஒரு இலட சத்து 30 ஆயிரம் பேரிடம் ஒன்லைனிலேயே கருத்து கேட்கப்பட்டது. அதில், பா.ஜனதாவின் தேர்தல் 'அறிக்கையில் குறிப்பிட்டபடி வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா?, மோடி அரசின் செயறபாடுகள் எப்படி என்பது பற்றியும், பல்வேறு திட்டங்கள் பற்றியும் கருத்து கேட்கப்பட்டது.

அதில் 10 ஆண்டுகள் நடந்த காங்கிரஸ் கூட்டணி அரசைவிட 60 நாள் பா.ஜனதா அரசு சிறப்பாக செயற்படுகிறது என்று பெரும்பாலானவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். 50 சதவீதம் பேர் திருப்தியடைந்துள்ளனர்.

30 சதவீதம் பேர் தங்களது எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யபபடவில்லை என்றும் 20 சதவீதம் பேர் எதிர்ப்பார்ப்புகளையும் தாண்டி மோடி அரசு சிறப்பாக செயறபடுகிறது. 10 ஆண்டுகள் காங்கிரஸ் அரசின் செயற்பாடுகளை முந்திவிட்டது என்றும் கருத்து தெரிவித்துள்ளனர். (6)

# சிரியாவில் இரண்டு பெண்களுக்கு கற்களால் எறிந்து மரண தண்டனை



சிரியாவின் றக்கா நகரில் திருமணத்துக்கு அப்பாலான காதல் தொடர்பை கொண்டிருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவருக்கு கற்களால் எறிந்து ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி மரண தண்டனை நிறைவேற்றத்தை நேரில் கண்ட பெயரை வெளியிடாத நபரொருவர் பிரித்தானிய டெய்லி மெயில் ஊடகத்துக்கு இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பட்டாஹ் அஹமட் என்ற பெண்ணுக்கே இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்பவ தினம் பிராந்திய மத குரு ஒருவர் தீர்ப்பை வாசித்ததும் அருகிலிருந்த நகர சபை மைதானத்தில் டிரக் வண்டியொன்றில் பெருந்தொகையான கற்கள் எடுத்து வரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பட்டாஹ் அஹமட் கால் முதல் பாதம் வரை கறுப்புத் துணியாலான ஆடை மூடியிருக்க அந்த மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

பின்னர் அவர் இடுப்பு பகுதி வரை மண்ணில் புதைக்கப் படுகிறார்.

அதன் பின் அங்கிருந்த போராளி குழு உறுப்பினர்கள் பட்டாஹ் அஹமட் மீது துடிதுடித்து இறக்கும் வரை கற்களை வீசுகின்றனர்.

மேற்படி சம்பவமானது றக்கா நகரிலுள்ள உதைபந்தாட்ட மைதானத்துக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது ஈராக்கில் 24 மணி நேர காலப் பகுதியில் போராளிகளால் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது மரண தண்டனை நிறைவேற்றமாகும்.

பட்டாஹ் அஹமட்டிற்கான மரண தண்டனைக்கு முன் 26 வயதான ஷம் ஸெஹ் அப்துல்லாஹ் என்ற பெண்ணுக்கு கற்களால் எறிந்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (6)

# துப்பாக்கி சூட்டில் 7 படையினர் பலி

## காஷ்மீரில் சம்பவம்

தெற்கு காஷ்மீரில் இருந்து ஸ்ரீநகர் நோக்கி சென்ற பாதுகாப்பு படையினர் வாகனம் மீது அப்பகுதியில் மறைந்து இருந்த தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது. இந்த துப்பாக்கி சூட்டில் 7 எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் இரண்டு பேர் நிலை மோசமாக உள்ளது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

காஷ்மீர் மாநிலத்தில் உள்ள சியாச்சின் பனிப்பகுதிக்கு இன்று பிரதமர் மோடி பயணம் மேற்கொள்கிறார். இந்நிலையில் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (6)

# காட்டுமிராண்டித்தனம்; அவுஸ்.கடும் கண்டனம்



(சிட்னி)


சிரியாவின் அரசாங்க படைச் சிப்பாய் ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலையை, அவுஸ்திரேலியர் ஒருவரின் மகன் என்று நம்பப்படும் சிறுவன் ஒருவன் தூக்கிப் பிடித்திருப்பதைக் காட்டுகின்ற படத்தை பிரதமர் டொனி அபொட் **"காட்டுமிராண்டித்தனமானது"** என்று கண்டித்துள்ளார். படத்தை வெளியிட்ட நபர் அவுஸ் திரேலியாவில் பயங்கரவாதக் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவராவார்.

சிரியாவில் ஐ.எஸ் ஐ. எஸ். போராளிகளுடன் இணை வதற்கு முன்னதாக அவுஸ்திரே லியாவில் தண்டனைக் காலம் அனுபவித்துள்ள காலித் ஷாரொப் என்பவரே (சிறுவனின் தந்தை) இந்தப் படத்தை டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளதாக படத்தை வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய செய்திப் பத்திரிகை கூறியுள்ளது.

இந்தப் படம் தொடர்பில் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகத் தலைவர்களும் அதிர்ச்சியும் அருவருப்பும் வெளியிட்டுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தினரின் இழிவான கொடூர முகத்தையே இந்தப் படம் காட்டுவதாக அவுஸ்திரேலிய பிரதமர் மேலும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (6)

# தலைவரின் பதவி பறிப்பு



திருப்பதி ஏழுமலையான் கோவில் அறங்காவலர் குழு தலைவராக கனிமுனி பாபி ராஜு இருந்து வந்தார்.

ஆந்திராவில் கடந்த 10 ஆண்டு காலமாக நடந்த காங்கிரஸ் ஆட்சியில் நியமிக்கப்பட்ட இவர் 2ஆவது முறையாக இப்பத விக்கு நியமிக்கப்பட்டவர்.

தற்போது ஆந்திராவில் தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடு முதல் மந்திரியாக பதவி ஏற்றதும் கோவில்களின் பழைய அறங்காவலர்கள் குழு பதவி விலகியது. திருப்பதி ஏழுமலையான் கோவில் அறங்காவலர் குழு தலைவர் பாபி ராஜுவும் பதவி விலக அறிவுறுத்தப்பட்டார்.

ஆனால் இராஜினாமா செய்ய பாபிராஜு மறுத்துவிட்டார். 'இப்பதவி கடவுள் அளித்த வரப்பிரசாதம். இறுதி வரை கடவுளுக்கு தொண்டு செய்வேன் என்று ஏழுமலையான் முன்பு சத்தியப் பிரமாணம் செய்து உள்ளேன். இடையில் பதவி விலகினால் அது ஏழு மலையானுக்கு செய்யும் துரோகம் என்று அவர் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில் திருப்பதி அறங்காவலர் குழு தலைவர் பாபிராஜு பதவியை பறித்து ஆந்திர அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டது. (6)

# அமெரிக்காவில் எபோலா வைரஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

எபோலா வைரஸ் நோய், பாதித்த நாடுகளில் லைபீரியாவும் ஒன்று. இங்கு ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்காவின் மாப்பயோ பாமாசூடிகல்ஸ் நிறுவனம் இந்த நோயை குணப்படுத்துக் கூடிய மருந்து தயாரித்துள்ளது.

அதற்கு 'ஷ்மாப்' என பெயரிடப்பட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவை சேர்ந்த 2 சமூகநல ஆர்வலர்கள் 'எபோலா' நோயால பாதிக்கப்பட்டனர்.

தற்போது அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரும் பா[illegible] பட்டு மாட்ரிட் வைத்தி[illegible]யில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர்களுக்கு 'ஷ்மாப்' மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதனால் அவர்களுக்கு 'எபோலா' நோய் குணமாகி வருகிறது.

எனவே, இந்த மருந்தை தங்களுக்கு வழங்கும்படி அமெரிக்கா[illegible] லைபீரியா அரசு [illegible]

அந்த மருந்து அடுத்த வாரம் லைபீரியாவுக்கு அனுப்பப்பட உள்ளது.

இந்த தகவலை லைபீரியா ஜனாதிபதி எல்லன் ஜான்சன் சர்லீப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜெனீவாவில் உலக சுகாதார நிறுவனம் நடத்திய கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் என்ற சொல்லுக்கு
நல்ல நடத்தை என்பது பொருளாகும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புகலிடக் கோரிக்கையாளர்கள் சார்பில் இலங்கைக்கு எதிராக நீதிமன்றில் மனு

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்களின் சார்பில் இலங்கை மனித உரிமை அமைப்புக்கள் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளன. இலங்கை வெளி விவகார அமைச்சிற்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து விதமான ஒடுக்கு முறைகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பின் தலைவி நிமல்கா பெர்னாண்டோ மற்றும் ஏனைய ஐந்து பேர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையில் புகலிடம் கோரிய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பிரஜைகளை நாடு கடத்தும் வெளி விவகார அமைச்சின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை இடை நிறுத்துமாறு இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களே இவ்வாறு புகலிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகள் தொடர்பில் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், சர்வதேச புகலிடக் கோரிக்கையாளர்கள் பிரகடனங்களை மதித்துச் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உரிய பாதுகாப்பினை அரசாங்கம் வழங்கியிருந்தது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரும் எண்ணிக்கையிலானவர்கள் புகலிடம் கோரி வருவதாகத் வெளிவிவகார அமைச்சின் பொதுத் தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் சட்யா ரொட்ரிகோ தெரிவித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்களினால் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சில புகலிடக் கோரிக்கையாளர்கள் நான்கு ஆண்டுகள் வரையில் இலங்கையில் தங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவர்களில் சிலர் மலேரியா நோயினால் பீடிக்கபபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## நல்லூர் ஆலயத்திற்கு வருவது எப்படி என்று விளக்குங்கள்?

நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவம் எங்கள் மண்ணைப் புனிதமாக்கும் காலப் பகுதியாகும்.

வருடத்தில் வரும் பன்னிரண்டு மாதங்களில் ஒரு மாதம் நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு ஒதுக்கப்பட்டது எனில், எங்கள் வாழ்க்கையில் கந்தப் பெருமானின் மீது நாம் கொண்ட அளப்பரும் பக்தி எத்துணை உயர்வானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவம் என்பது எங்களை ஆற்றுப்படுத்துவதற்காக எடுக்கின்ற திருவிழா. எனவே அத்தகைய பெருமை மிக்க காலத்தில் நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயப் பகுதி மிகவும் புனிதமாகப் பேணப்பட வேண்டும்.

அந்தப் புனிதத்தைப் பேணுவது என்பதில் பல்வேறு சவால்கள் இருக்கவே செய்யும். அதில் முக்கியமானது நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தில் பங்கேற்பதற்கு தனித்து இந்த நாட்டின் சைவத் தமிழர்கள் மட்டுமன்றி தென்பகுதியில் இருக்கக் கூடிய சிங்கள மக்கள், வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் எனப் பல தரப்பினரும் வருகின்றனர்.

எனவே சர்வதேச அளவில் பக்தர்கள் வருகின்ற ஆலயமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இருப்பதன் காரணமாக நல்லூருக்கு வருகின்றவர்களை வழிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம்.

அதாவது; நல்லூர்க் கந்தனின் ஆலயத்திற்கு வருகின்றவர்கள் எவ்வாறான பண்பாட்டுக் கோலங்களைப் பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வழிகாட்டல் கையேடுகள் வெளியிடப்படுவது அவசியம்.

இந்த வழிகாட்டல் கையேடுகளை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தின் ஆலோசனையுடன் யாழ்ப்பாண மாநகர சபை வெளியிடுவது பொருத்தமுடையது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு வருகின்ற வெளிநாட்டவர்கள் பின்பற்ற வேண்டிய அல்லது கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் பற்றி அறிந்திருப்பது அவசியம். அதேநேரம் அவர்களுக்கு அவை பற்றித் தெரியப்படுத்துகின்ற கடமைப்பாடும் எங்களுக்கு உண்டு.

நல்லூர்க் கந்தனின் ஆலய மகிமையை தெரியப்படுத்தி அந்த ஆலயத்தின் வளாகம் தெய்வீகத் தன்மை பொருந்தியது என்ற செய்தியை தெளிவுபடுத்தி, ஆலயத்திற்கு வருகின்ற போது அணிய வேண்டிய ஆடைக்கலாசாரம், உண்ணுகின்ற உணவின் தன்மை என்பன பற்றியும் அவர்களுக்குப் புரியக் கூடிய மொழிகளில் கையேடுகளை வெளியிடும் போது அதனை வாசிக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் தென் பகுதியினர் நிச்சயம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைப் பின்பற்றுவர்.

எனவே நல்லூர் ஆலயத்தின் அமைப்பு, அதனைச் சுற்றி வருகின்ற ஒழுங்குமுறை, பூசை நேரங்கள், உள் வீதியில் புகைப்படங்கள் எடுக்கலாகாது என்ற அறிவித்தல்கள், மது மாமிசம் உண்டுவிட்டு ஆலயத்திற்குள் செல்வது ஆகாது என்ற தெளிவுபடுத்தல்கள்; நல்லூர்-யாழ்ப்பாணம் என்பவற்றின் அமைவிடங்களை உள்ளடக்கியதான வழிகாட்டல் புத்தகங்கள் மும்மொழியிலும் வெளியிடப்படுவது அவசரமாகச் செய்யவேண்டிய விடயமாகும்.

இத்தகைய வழிகாட்டல் பிரதிகளை வெளிநாட்டவர்களுக்கு இலவசமாக வழங்குவது பற்றியும் சிந்திப்பது பொருத்துடையது.

எங்கள் நல்லைக் கந்தப் பெருமானின் ஆலயச் சூழலில் புனிதத்தன்மையை ஏற்படுத்துவதற்கு இது போன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம்.

## மகிந்தவின் அழைப்பை அவ்தாஸ் கௌஷல் ஏற்பு!

காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவில் இணைந்து பணியாற்றுமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வதாக இந்திய மனித உரிமை பணியாளர் அவ்தாஸ் கௌஷல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து தனக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர் தன்னை குறிப்பிட்ட குழுவில் இணைந்து செயற்படுமாறு கோரியதாகவும் தெரிவித்துள்ள அவ்தாஸ் கௌஷல தான் அந்த குழுவின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டதாகவும் அதில் அங்கம் வகிப்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்துள்ளார். (6)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 25282 வீடுகள் நிர்மாணம்

### யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014 மே மாதம் வரையில் 25 ஆயிரத்து 282 வீடுகள் பல்வேறு திட்டங்களின் மூலம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் வீடு அற்றவர்களின் விபரங்கள், கிராம அலுவலர் ஊடாக சேகரிக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் மூலம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தவகையில், வடக்கு, கிழக்கில் வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் 13 ஆயிரத்து 350 வீடுகளும், மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் 100 வீடுகளும், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் 686 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக 3 ஆயிரத்து 428 வீடுகளும், இலங்கை இராணுவத்தால் ஆயிரத்து 700 வீடுகளும், வங்கிகளால் 211 வீடுகளும், சமூக சேவைகள் அமைச்சால் 62 வீடுகளும் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 5 ஆயிரத்து 745 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

## வான் பரப்பில் தீப்பந்து

(கொழும்பு)

பொலநறுவை, கலேன்பிதுனு மற்றும் அதனை அண்மித்த பிரதேச வானில் அடையாளம் காணமுடியாத வெளிச்சம் தென்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கெக்கிராவ, ஹபரன, கிஹுரக்கொட பிரதேச வான் பரப்பிலும் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் தீப்பந்து போன்ற வெளிச்சம் தென்பட்டதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த தீப்பந்து சற்று நேரத்தில் ஒளியிழந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்திலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் [illegible] தெரிவித்துள்ளார். (6)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**13.08.2014 இற்கான வினா**

**''ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய'' என்ற கந்தபுராண பாடல் வரிக்கு அமைய, முருகன் உதித்த (தோன்றிய) தினம் எது?**

**12.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**

**புராணபடனம் என்றால் என்ன?**

**அதனை செய்யத் தகுந்தவர் யார்?**

☞ புராணம் ஒன்றினை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நியமமாக விதிப்படி படித்தல், பயன் சொல்லல், பக்தி சிரத்தையுடன் கேட்டல்

☞ சைவபோசன ஆசாரசீலராக இருப்பவர்
சமயதீட்சை பெற்றவராக இருப்பவர்
சமய, நீதி, இலக்கண இலக்கியங்களை முறைப்படி கற்றவர்,
அவற்றைத் தம்வாழ்வில் கடைப்பிடிப்பவர்

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பக்குவம் பெற்றால் துன்பமில்லை



✦ மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பரோப காரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும்.

✦ இறைவனுடைய நியதியில், உலகில் உள்ள அனைத்து விடயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கை தான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது.

✦ பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல.ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போது தான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும்.

✦ மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போது கண்ணில் படும் வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம் மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும். செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை.

✦ ஒரு யானையைக் கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகி விடும். அதைப் போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விடயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான காற்பந்து சுற்றுப் போட்டி

## யாழ்.பல்கலை சம்பியன்



ஆட்ட நாயகன் ஞானரூபன்



சம்பியனான யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

செபமாலை நாயகம் ஞானரூபனின் வேகமான ஆட்டத்தினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 2:0 என்ற கோல்களினால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை வென்று அனைத்துப் பல்கலைக்கழக காற்பந்தாட்டச் சம்பியனாகியது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்தது.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக இடம்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இந்தக் காற்பந்தாட்டப் போட்டியில் 14 பல்கலைக்கழக அணிகள் பங்குபற்றியிருந்தன.

முதற்சுற்று ஆட்டங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெற்று வந்தன.

தொடர்ந்து, நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, கிழக்குப் பல்கலைக்கழக அணியையும் தென் கிழக்குப் பல்கலைக்கழக அணி ஊவா அணியையும் வென்று இறுதிக்குள் நுழைந்தன. இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இப் போட்டியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக அணியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய சில நிமிடத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரர் ஞானரூபன் தனது அணிக்கான முதலாவது கோலை பெற்று எதிரணிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.



இரண்டாமிடத்தினை பெற்ற தென்கிழக்கு பல்கலைக்கழகம்



மூன்றாமிடத்தினை பெற்ற கிழக்கு பல்கலைக்கழகம்

இந்நிலையில் போட்டி மிகவும் விறுவிறுப்படைந்தாலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வீரர்கள் எதிரணியை கலங்கடிக்கும் வகையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு சளைக்காது தென்கிழக்கு பல்கலைக்கழக அணி எதிர்த்து விளையாடிய போதிலும் மீண்டும் ஒரு கோலை ஞானரூபன் பெற்றுக் கொண்டார். இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் மீண்டும் தொடங்கியதும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரர்கள் தொடர்ந்து எதிரணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்தபோதிலும் கோல்கள் எதனையும் பெறமுடியாதவாறு எதிரணியினர் தடுத்து விளையாடினர். இந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமல் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் தென்கிழக்கு பல்கலைக்கழக அணியை வெற்றி பெற்று தேசிய மட்டத்தில் பல்கலைக்கழக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடர் ஆட்டநாயகனாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வீரன் ஞானரூபன் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை மூன்றாம் இடத்துக்காக இடம்பெற்ற ஆட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகமும் வயம்ப பல்கலைக்கழகமும் மோதிக் கொண்டன.

இந்த ஆட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வயம்ப பல்கலைக்கழத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஞ

# ரோஜர்ஸ் கோப்பை டெனிஸ்; சோங்கா, ரட்வன்ஸ்கா சம்பியன்





ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பிரான்சின் ஜோ வில்பிரைட் சோங்கா, சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தி சம்பியன் கோப்பையை வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா பட்டம் வென்றார்.

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் தொடர் கனடாவின் மான்ட்ரீல் நகரில் நடந்தது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு 13 ஆம் நிலை வீரரான பிரான்சின் ஜோ வில்பிரைட் சோங்காவும், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும் தகுதி பெற்றனர். இப்போட்டியில் பெடரர் வெற்றி பெற்று தனது 80 ஆவது ஏடிபி பட்டத்தை வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சோங்கா தனது அதிரடி ஆட்டம், புயல் வேக சர்வீசால் பெடரரை திக்குமுக்காட செய்தார். 11 ஏஸ்களை வீசி 7:5, 7:6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். இதன் மூலம், 2008 ஆம் ஆண்டுக்கு பின்பு முதல் முறையாக ஏடிபி அந்தஸ்து பெற்ற தொடரில் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார் சோங்கா.

டென்னிஸ் ரசிகர்கள் மததி யில் அதிகளவில் பிரபலமில்லாத சோங்கா, இத் தொடரில் திடீர் ஹீரோவாக மாறியிருக்கிறார். இந்த ஒரே தொடரில் டொப் 10 வீரர்களில் 4 பேரை வென்றிருக்கிறார்.

இவருக்கு பரிசுத்தொகையாக 3.60 கோடி ரூபா வழங்கப்பட்டது. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸகா, 26 ஆம் நிலை வீராங் கனையான அமெரிககான வீனஸ் வில்லியம்சை எதிர்த்து விளையாடினார்.

இதில், ரத்வன்ஸ்கா 6:4, 6:2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி சம்பியன் கோப்பையை வென்றார். பரிசுத் தொகையாக இவருக்கு 2.7 கோடி ரூபா வழங்கப்பட்டது. (க)

# விடைபெற்றார் ஜேர்மனியின் முன்னணி வீரர் குளாஸ்



உலகக் கோப்பை காற்பந்து தொடரில் அதிக கோல்கள் அடித்த ஜேர்மன் வீரர் மிரோஸ்லாவ் குளோஸ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

பிரேசில் நாட்டில் சமீபத்தில் நடந்து முடிந்த உலகக் கோப்பை காற்பந்து தொடரில் ஜேர்மன் அணி ஆர்ஜெண்டினாவை வீழ்த்தி கோப்பையை வென்றது. அந்த அணியில் இடம்பெற்ற 36 வயதான குளோஸ், உலகக்கோப்பையில் தனது 16 ஆவது கோலை பதிவு செய்தார். இதன்மூலம் உலகக் கோப்பையில் அதிக கோல்கள் அடித்திருந்த பிரேசில் வீரர் ரொனால்டோவை (15 கோல்கள்) முந்தி சாதனை படைத்தார் குளோஸ்.

1990க்குப் பின்பு உலகக்கோப்பையை வென்ற மகிழ்ச்சியில் ஜேர்மன் வீரர்கள் உள்ள நிலையில், அணியின் முன்னணி வீரரான குளோஸ், சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்றுமுன்தினம் அறிவித்தார். ஜேர்மன் தேசிய அணியில் இருந்தும் அவர் விலகினார்.

இதுபற்றி குளோஸ் கூறுகையில், "பிரேசில் நாட்டில் சம்பியன் பட்டம் வென்றதன்மூலம் எனது சிறுவயது கனவு நிறைவேறியுள்ளது. ஜேர்மனியின் தேசிய அணிக்காக விளையாடிய தருணங்களை மறக்க முடியாது. எனது சிறந்த கோலையும் அடித்துள்ளேன் என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி வாங்கினாலும் தோனிதான் ரொப்!

இங்கிலாந்து டெஸ்ட் போட்டியில் மோசமான தோல்வியை தழுவினாலும், வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக அணியை வழி நடத்தியதில் தோனி 3-வது இடத்தில் இருக்கிறார்.

மோசமான தோல்விக்கு பின்னும் இந்திய அணித்தலைவர்களின் வரிசையில் தோனிக்கு 3-வது இடமா? என்ற கேள்வி எழுந்தாலும், புள்ளி விவரங்கள் இதை தெளிவுபடுத்துக்கின்றன. இங்கிலாந்தில் இந்திய அணி அடுத்தடுத்து டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை, அதுவும் படுதோல்வியை தழுவியதால் ரசிகர்கள் கொந்தளிக்கின்றனர்.

ஆனால் இந்திய கிரிக்கெட் வரலாற்றை பார்த்தால் சொந்த நாட்டில் பலம் வாய்ந்த இந்திய அணி, வெளிநாட்டில் அவ்வாறு செயல்படவில்லை. இந்திய அணி தனது 2-வது டெஸ்ட போட்டியில் பிரபலமான லோட்ஸ் மைதானத்தில் வைத்து இங்கிலாந்தை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம், நமது பழைய சோதனை காலம் முடிந்து.


இனிமேல்இங்கிலாந்து மண்ணில் சாதனை படைக்கப்போகிறோம் என்று இந்திய ரசிகர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் நடந்தது அதற்கு எதிரான ஒன்றுதான். 3-வது மற்றும் 4-வது டெஸ்டில் இந்திய அணி படுதோல்வியை சந்தித்தது.

அதிலும் நான்காவது டெஸ்ட் போட்டி, 3 நாளிலேயே முடிவுக்கு வந்ததால் கிரிக்கெட் பிரபலங்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகினர். இந்நிலையில் தோனி டெஸ்ட் போட்டிக்கு மோசமான அணித்தலைவர் என்று குரல்கள் ஒலிக்க தொடங்கியுள்ளது.

ஆனாலும், வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக செயல்பட்ட இந்திய அணித்தலைவர்கள் வரிசையில் தோனி 3-வது இடத்தில் உள்ளார் என்பதை புள்ளி விவரங்கள் கோடிட்டு காட்டுகின்றன. (க)



# பத்திரிகையாளர் கன்னத்தை பதம் பார்த்த மரடோனா



ஆர்ஜென்டினா அணியின் கால்பந்து ஜாம்பவான் மரடோனா பத்திரிகையாளர் ஒருவரை கன்னத்தில் அறைந்து புதிய விவகாரத்தில் சிக்கிக் கொண்டார்.

மரடோனா அவரது குழந்தை டிகோ பெர்ணான்டோ மற்றும் காதலியுடன் தலைநகர் புவனஸ் ஏர்ஸில் உள்ள தியேட்டர் ஒன்றுக்கு வந்திருந்தார். அப்போது அவரை கண்ட பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டனர்.

இதனையடுத்து பத்திரிகையாளர்களை சந்தித்து மரடோனா பேசினார். அப்போது நிருபர்களிடம் கூறிய அவர் இது என்து குழந்தைக்கு ஒரு பரிசு. முதன் முதலாக எனது மகனுடன் முழு நாட்களையும் கழிக்கிறேன் என்று கூறினார். அப்போது ஒரு நிருபர் கை சைகை மூலம் ஏதோ கேட்டுள்ளார். குழந்தையின் தாயார் குறித்து கேட்டதாக கூறப்படுகிறது.

இதனால் கோபமடைந்த மரடோனா என்ன இது முட்டாள்தனம்! நான் ஏன் என் மனைவியை குழப்பம் அடைய செய்யவேண்டும். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

எனக்கு 53 வயது ஆகிறது என்று கூறிக் கொண்டே காரை விட்டு வெளியே வந்து பத்திரிகையாளர் ஒருவரை கன்னத்தில் பளார் என அறைந்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் 25 வயது பிரபல இளம் பெண் பத்திரிகையாளர் எமி அமோடோ அவரது காதலியாக உள்ளார் என கூறப்பட்டது.

அதே போல் முன்னாள் காதலி ஒலிவியா. டுபாயில் அவரது மாளிகையில் இருந்த பொருட்களை திருடி விட்டதாக மரடோனா புகாரின் பேரில் கைது செய்யபட்டார்.

இந்நிலையில் பத்திரிகையாளருக்கு பளார் விட்டு புதிய விவகாரம் ஒன்றில் மாட்டிக் கொண்டார் மரடோனா. (க)

## இராணுவ...

இதேவேளை இலங்கையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு மாநாடு 2014 தொடர்பிலும் இருவரும் பேச்சு நடத்தினர்.

இந்த கலந்துரையாட லின்போது இராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர உட்பட்டோர் பங்கேற்றிருந்தனர். (எ-11)

## நளினி...

எதுவும் இல்லை. குடிதண்ணீர் கூட சரியாக வழங்கவில்லை. இதனை சரி செய்ய வேண்டும். தனிமை சிறையில் இருந்து விடுவிக்கவும், பிற கைதிகளுடன் பேச அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதோடு, உயர்நீதிமன்றம் மூலம் தனக்கு சிறையில் ஏ கிளாஸ் வசதியுள்ள அறை ஒதுக்க வேண்டும் என கேட்டு 3 ஆண்டுகளுக்கு முன்பு மனு செய்தார்.

உயர்நீதிமன்றமும் நளினிக்கு ஏ கிளாஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டது. ஆனால் அதிகாரிகள் இன்று வரை அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லை.

அதையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டு உண்ணாவிரதம் இருந்து வருகிறார். (எ-11)

# மருத்துவமாது மயங்கி வீழ்ந்து மரணம்!

(யாழ்ப்பாணம்)

கடமை நேரத்தில் மயங்கி விழுந்த மருத்துவ மாது ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம் நேறறு செவ்வாய்க்கிழமை மட்டுவில் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரான்லின் நிஷாந்தினி (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று ஒரு மணியளவில் தனது வெளிக் கடமையை முடித்துகொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் திரும்பிய அவர் அங்கு மயங்கி விழுந்தார் என்றும், உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்று அங்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பாம்பு தீண்டி சிறுவன் பலி

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை, கோழியாகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நித்திரையில் இருந்த 3 வயது சிறுவனைப் பாம்பு தீண்டியதில் அவர் மரணமடைந்தார் என வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கோழியாகுளம் பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரநாதன் தபிசன் (வயது 3) என்ற சிறுவனே இவ்வாறு மரணமடைந்தவராவார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவின் மீள்குடியேற்ற கிராமமான ஓமந்தை, கோழியாகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தாய் மற்றும் இரண்டு சகோதரர்களுடன் குறித்த சிறுவன் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டினுள் நுழைந்த பாம்பு அவரைத் தீண்டியுள்ளது.

இதனையடுத்து அந்தச் சிறுவன் அழுதவாறு கையில் ஏதோ கடித்து விட்டதாக தனது தாயாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு நள்ளிரவு ஒரு மணியளவில் கொண்டுசெல்லப்பட்டார். சிறுவனின் கையின் பல இடங்களில் பாம்பு தீண்டியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்ததையடுத்து. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிறுவன் நேற்று அதிகாலை மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11,250)

# பா.ஜ.கவுடனான பேச்சு தோல்வியில் முடிந்தது!

(சென்னை)

இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில், பாரதிய ஜனதாக் கட்சி பிரதிநிதிகளுடன் இரகசிய பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசினால் கைது செய்யப்பட்ட 94 மீனவர்கள் மற்றும் 63 படகுகளை விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் 20 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் பாரதிய ஜனதாக் கட்சியினருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் வெற்றியளிக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கு 10 நாட்களுக்குள் நடவடிக்கை எடுப்பதாக இந்திய மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஸ்ணன் வழங்கிய உறுதிமொழி நேற்றுடன் காலாவதியாவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் தமக்கான உறுதியான தீர்வுகள் வழங்கப்படாத நிலையில், இராமேஸ்வர மீனவர்கள் தங்கச்சிமடத்தில் கூடி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இன்று முதல் இந்தப் போராட்டத்தில் தாம் ஈடுபடவுள்ளதாக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.(எ-11)

# லஞ்சம் கேட்டவர் வகையாக மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

பொதுச் சுகாதார பரிசோதகராக நடித்து லஞ்சம் வாங்கிய நபர் ஒருவர் வகையாக மாட்டிக் கொண்டார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை புன்னாலைக் கட்டுவன் தெற்கு, ஈவினைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இது குறித்துத் தெரியவருவதாவது,

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு கடந்த வாரம் சென்ற குறிப்பிட்ட இளைஞர் தன்னைப் பொது சுகாதாரப் பரிசோதகர் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் உணவகங்களில் உணவுகள், சிற்றுண்டிகள் என்பவற்றை உண்டுவிட்டு பணம் கொடுக்காமல் செல்வதும் ஏனை கடைகளுக்குச் சென்று லஞ்சமாக பணத்தை பெறும் நடவடிக்கை யிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வாகையடியில் உள்ள கடை ஒன்றில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அதற்காக வழக்கு எழுதப் போகிறார் எனவும் கூறி ஐயாயிரம் ரூபாய் பணத்தை லஞ்சமாகக் கேட்டுள்ளார். சந்தேகம் கொண்ட கடை உரிமையாளர் அவரை நாளை வரும்படி கூறியுள்ளார்.

அத்துடன் பிரதேச சபை மற்றும் சுகாதார வைத்தியதிகாரி பணிமனை ஆகியவற்றுக்கு இது தொடர்பாகக் கூறியுமுள்ளார். நேற்று பகல் அந்த இடத்திற்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிட்ட நபர் பணம் வாங்குவதற்கு வந்தவேளை கையும்மெய்யுமாகப் பிடித்தனர்.

அந்தவேளை, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து அவருக்கு உரிய மரியாதை கொடுத்துவிட்டு சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்தனர். சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(எ-11)

# பணம் சூறையாடினால் பரலோகத்தில் தண்டனை

## அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் பணத்தை சூறையாடுவோருக்கு பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும் என கண்டி அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளின் போது பணம் மோசடி செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் பணம் ஜனாதிபதியினதோ அல்லது வேறு யாரினதோ சொத்துக்கள் அல்ல. மக்கள் பணத்தை சூறையாடுவோருக்கு இந்த உலகத்தில் மட்டுமன்றி பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும். நாம் சில இடங்களில் வெளியிடும் கருத்துக்கள் மிகவும் அழுத்தமாக ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் எங்களது கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதுபற்றி கவலைப்படப் போவதில்லை என அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்...

பல உண்மைகளை நாம் அம்பலப்படுத்தினோம்.

இது நடைபெற்று ஓரிரு தினங்களுக்குப் பின்னர் ராஜிதவும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார், ஆனால், அவர் நாம் அவருக்கெதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்காமல் தொடர்ந்தும், எமக்கெதிரான பொய்யான தகவல்களையே அங்கு வெளியிட்டுள்ளார்.

இவரின் நடத்தையானது எமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு மற்றும் சக்திமிக்க அமைப்பு என்பதால் நாட்டிலுள்ள பிரச்சினைகள் குறித்து நாம் அவதானம்செலுத்தவேண்டும்.

இதனால், நாம்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து மாத்திரமே அவரிடம் கேள்விகளை எழுப்பினோமே ஒழிய அவரின் தனிப்பட்ட தகவல்கள்குறித்து எவ்வித விளக்கமும் கோரவில்லை.

அதற்கு அவர் நிச்சயமாக விளக்கமளித்தே ஆக வேண்டும்.

அளுத்கம, பேருவளை, தர்ஹா நகர் கலவரத்தின் போதும் எமக்கெதிராகவேராஜித பல கருத்துக்களை முன்வைத்தார்.

தற்போது, நாம் நோர்வே மற்றும் ஐக்கியத் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவிடம் பணம் பெற்றுக் கொண்டு செயற்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முடிந்தால் இவற்றை ஆதாரத்துடன நிரூபித்துக் காட்ட சொல்லி அவரிடம் சவால் விடுக்கிறோம.

அதேநேரத்தில், ஜனாதிபதியும் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் செயற்பாடுகள் குறித்து பொது பல சேனாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் இதன் போது கோரிக்கை வடுத்துள்ளார். (எ-11)

## மாணவன் வாக்கு...

கலைக் கழக மாணவர் விடுதியின் கழிப்பறையில் வைத்துத் தன்னைத்தாக்கி வாய் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் தன்னை விடுதிக்கு அருகில் உள்ள பற்றையில் போட்டிருந்ததாகவும் மயக்கம் தெளிந்து எழுந்து தான் வந்ததாகவும் அவர் இம்மாதம் மூன்றாம திகதி பொலிஸாரிடம் முறையிட்டிருந்தார்.

அவர் தாக்கப்பட்ட கழிப்பறையில், தமிழ மாணவர்கள் அங்கிருந்து வெளியேறிவட வேண்டும்என்று உயிர்க்கூறுத்தல்விடுதத எச்சரிக்கை வாசகங்கள்அடங்கிய சுவரொட்டிகள் இரண்டாவது தடவையாகக் காணப்பட்ட தாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந் நிலையில் பலாங்கொடை வைத்தியசாலையிலும் பின்னர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வெளியேறிய அந்த மாணவனை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியதன் பின்னர், பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினர் அவரை விசாரணைக்கு உட்படுத்தியிருநதனர்.

கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த அவர் அங்கு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அப்போது தனக்குத்தானே காயங்களை ஏற்படுததிக் கொண்டு கைகளையும் தானே கட்டிக்கொண்டதாக அவர் கூறியிருப்பதாக பொலிஸ பேச்சாளர் அஜித் ரோகண கூறினார்.

ஆயினும் பொலிஸார் இப்போது கூறியுள்ள இந்த விடயம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவனுடைய தரப்பில் கருத்து எதனையும் அறிய முடியவில்லை.

இந்த மாணவன் தொடர்ந்து பயங்கரவாதப் புலனாய்வு பிரிவனரால்தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அஜித் ரோகண தெரிவித்திருக்கின்றார். (எ-11)

## நிபுணர்கள் குழு...

யில், இந்திய மனித வுரிமை செயற்பாட்டாளர் அவ்தாஸ் கௌஷல் ஆலோசனைக் குழுவில் இடம்பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்தன, ஜனாதிபதி தொலைபேசியில் தன்னைத் தொடர்பு கொண்டு ஆலோசனைக் குழுவில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்ததாகவும், தான் அதில பங்கேற்க ஆர்வமுடன் இருப்பதாகவும் அவ்தாஸ் கௌஷல் கூறியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவர், தனிப்பட்ட தொடர்பின அடிப்படையில் தான் இந்திய நிபுணர் உள்ளடக்கப்படுவதற்கு சாத்தியங்கள் உள்ளன.

ஆயினும் இது இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதி பலிக்காது. இதில் புதுடில்லி ஒன்றுமே செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## நாட்டில்...

சேர்ந்த 5 இலட்சத்து 43 ஆயிரத்து 759 குடும்பங்கள் இந்த வரட்சியை எதிர்நோக்குவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தலைவர்கே.பிரசன்ன சந்தித் தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்டத்தில் நிலவும் வரட்சியான கால நிலை தொடர்பில்ஆராயும் கூட்ட மொன்று பொலன்றுவைமாவட்ட செயலகத்தில், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில்நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாறும் போதே, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். (எ-11)

## ஆட்டோவை மோதி...

ருந்து பிறவுண் வீதியூடாக வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளும், மோதிக்கொண டதிலேயே இந்தவிபத்து இடம்பெற்றது.

வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் ஆட்டோவை மோதித் தள்ளியதில் நிலை குலைந்த ஆட்டோ சாரதி வாகனத்தை திருப்ப முற்பட்டபோது ஆட்டோவின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த குறித்த மூன்றரை வயதுச் சிறுவன் கீழே விழுநதுள்ளான்.

இந் நிலையில் சிறுவனின் உடல் மீது ஆட்டோ ஏறியுள்ளது. ஆட்டோக்குள் அகப்பட்ட நிலையில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட சிறுவன் உடனடியாக யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான.

இருப்பினும் சிகிச்சை பயனின்றி அச்சிறுவன் நேற்று அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளான்.

இதில் யாழ்ப்பாணம அரசடி வீதி கந்தர்மடத்தை சேர்நத ஜெயகுமார் கோபிசன் என்ற மூன்றரை வயதுச் சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளான்.

சிறுவனின் மரணம் தொடர்பில்யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணையதிகாரி நமசிவாயம பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை மேற்படி விபத்துச்சம்பவத்துக்கு காரணமானவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சாவகச்சேரியைச் சேர்ந்த நபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ-6)

## பாப்பர...

வேண்டும்.

முன்னதாக, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த திட்டமிட்டிருந்த அரசாங்கம், தற்போது, அடுத்த ஆண்டு ஜனவரி 13-ம் திகதி பாப்பரசர் இலங்கை வருவதற்கு முன்னதாக தேர்தலை நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறது.

இதனால், ஜனாதிபதிபதவியேற்று நான்கு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாகவே, ஜனாதிபதி தேர்தலை நடத்தலாமா என்று உயர்நீதிமன்றத்தில் கருத்தை அறிய ஜனாதபதி முடிவு செய்துள்ளதாகததகவலகள் வெளியாகியுள்ளன. (எ-11)


7வது தடவையாக மீண்டும்
யாழ்ப்பாணத்திலும்
வவுனியாவிலும்
வெளிநாட்டு ஹொட்டேல் பயிற்சிநெறி
(Diploma in Hotel Management)
அறிமுகக் கருத்தரங்கும் அனுமதிகளும்
கற்கைநெறிக் காலத்தில் 75,000/- வரையில் வருமானமீட்டலாம்
கற்கைநெறி நிறைவில் விரும்பிய நாட்டில் அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்பு ஏற்பாடு
3 வருட விசாவுடன் மாதங்களுக்குள் பயணம்
SEGi UNIVERSITY

செப்டெம்பரில் 6ஆவது அணி பயணமாகிறது.
வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து 7வது அணியில் இணைந்துகொள்ள வாருங்கள்!
கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த) வயதெல்லை: 30
15ம் திகதி வெள்ளி பி.ப. 2 மணி
யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்
16ம் திகதி சனி காலை 10மணி
வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்
18ம் திகதி வெள்ளி மு.ப. 10மணி
யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி நிறுவனம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 www.sikaram.lk fb: Edu Sikaram
முற்பதிவுக்கு : 077 36 16 798
(C-8178) பிரவேசம் முற்றிலும் இலவசம்



- ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. (7288)
பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



af FRENCH MOVIES – JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
CHILDREN OF PARADISE 1
The French classic movie in black and white.
(1945, 95 min)
on Thursday 14 August 2014 at 4:00 p.m.
at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone : 0212228093
(7289)
French language. English subtitles. Free entrance.



அரியவாய்ப்பொன்று இன்றுடன்
கை நழுவத்தான் போகின்றது.
ஆம் Ukஇல் படிக்க, உழைக்க IELTS தேவையே இல்லை -
O/L ம் வேண்டாமே. இன்று இதற்கு இறுதிநாள்.
- இவ்வாய்ப்பு எப்போதாவது உங்களில் சிலருக்குக் கிடைக்கும் அபூர்வ சந்தர்ப்பம் ஆகும்.
- இத்தகைய அருமருந்தன்ன வாய்ப்பு உங்கள் கரம் விட்டு விலக அனுமதிப்பீர்களா?
இன்று நீங்கள் உங்கள் எதிர்காலத்திற்காக ஒருநொடி சிந்தியுங்கள். தவறின் இதனைத் தவற விட்டமைக்காக நீண்டநாள் வேதனைப்பட நேரிடலாம்.
இன்னும் இருவருக்கு மாத்திரமே ...
எனவே விரைந்து வாருங்கள். இன்று காலை 7 .00 மணி முதல் இரவு 7.00 மணிவரை உங்கள் வருகைக்காக விசேடமாக காத்திருப்போம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(7291) தொலைபேசி 0212219016, 0215689090



SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT
உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.
தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்
021 492 6003

இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்
SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.